விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி28 வியாழக்கிழமை (14.11.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 330

# பாதுகாப்பு உப குழுவின் 1வது கூட்டம்

# நேற்று முகமாலையில் கூடியது!

## அடுத்த கூட்டம் நாளை மறுதினம் தெல்லிப்பழையில்

(அலுவலக நிருபர்)

பாதகாப்பு வலயங்கள் மற்றும் மீள் குடியமர்வு சம்பந்தமான உப குவின் முதலாவது கூட்டம், நேற்று முகமாலை சூனியப்பிரதேசத்தில் சுமுகமான முறையில் இடம் பெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும், படைத்தரப்பு அதிகாரிகளும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையில் கூடி பாதுகாப்பு வலயங்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகிய கலந்துரையாடல் பிற்பகல் வரை நீடித்தது.

தீர்க்கமான இறுதி முடிவுகள் எதுவும எட்டப்படாத போதும,

✣நாகர் கோயில் பாதையை மக்கள் போக்கு வரத்துக்குத் திறந்து விடுவது,

✣மீனவர் குடும்பங்களை சொந்த இடங்களில் குடியமர்த்துவது,

✣வடக்கு கிழக்கு கடற்பிராந்தியத்தில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்துவது,

✣குருநகர், பாசையூர் மீனவர்களைக் கடற்றொழில் 24மணிநேரமும் ஈடுபட அனுமதிப்பது,

✣ஏ-9 யாழ் கண்டிவீதியை 24மணிநேரமும் போக்குவரத்துக்காகத் திறந்து விடுவது குறித்து ஆராயப்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)

## குற்றமற்றவரென நிஷாந்தன் விடுதலை

(ஊர்காவற்றுறை)

அனலைதீவில் மரண மடைந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் எஸ்.புஸ்பராசாவின் மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஈ.பி.டி.பி. அமைப்பின் பிரமுகர் நிஷாந்தன், நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி, நிஷாந்தனைக் குற்றமற்றவர் என்று குறிப்பிட்டு, அவரை விடுதலை செய்தார்.

மன்றில் ஆஜரான நிஷாந்தன் பிரஸ்தாப நபர் மரணமடைந்ததாகக்

(10ம் பக்கம் பார்க்க)

நாடு பிளவுறுவதை அனுமதிக்க முடியாது

# தேவை ஏற்படும் போது எனது அதிகாரத்தைப் பயன்படுத்துவேன்!

சமாதானப் பேச்சுப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது, ஜனாதிபதி சந்திரிகா கண்டியில் உரை

(நமது நிருபர்)

**அரசுக்கும் புலிகளுக்குமிடையில் இடம் பெற்று வரும்: சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கம் அளித்துள்ள உறுதி மொழிகளை அறிந்து கொள்ளும் உரிமைமக்களுக்கு உண்டு எனவே அதனை அரசு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போது கூறியுள்ளார்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி ஏற்று எட்டு ஆண்டுகள் பூர்த்தி அடைந்ததை யிட்டு அவரைப் பாராட்டும் முகமாக கண்டி தர்மராஜா கல்லூரியில் வைபவம் ஒன்று நடைபெற்றது.

அப் பாராட்டு வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கலந்து கொண்டு உரையாற்றுகையில்:-

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போது அப் பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ்.வந்த பயணிகள் வான் அனுராதபுரத்தில் விபத்து

(அனுராதபுரம)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டுவந்த பயணிகள் வான் ஒன்று அனுராதபுரத்திற்கு அருகில் விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியானதாகவும் 5பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்தில் பலியானவரும் காயமடைந்தவர்களும் தமிழர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து நேற்று யாழ் புறப்பட்டு வந்த இந்த வான் அனுராதபுரத்திற்கு அருகில் தரித்து நின்ற லொறி ஒன்றுடன் மோதியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டது. காயமடைந்த

(10ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிகள் பகிஷ்கரிப்பை கைவிட்டனர்

## நேற்று சபையில் பிரசன்னம்

(கொழும்பு)

பாராளுமன்றப் பகிஷ்கரிப்பை முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிகள் கைவிட்டு, நேற்று பாராளுமன்றத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு இணைத்தலைமைப்பீடம் ஒன்றே

உள்ளே

க.பொ.த (சா/த) மாதிரி வினாத்தாள் - ஆங்கிலம்

தொடர்ச்சி, சங்கீதம்

# காஞ்சிரங்குடா படுகொலையில் குற்றச் செயல்கள் இல்லை!

## நேற்று நீதிமன்றம் தீர்ப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாம் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்ற இடத்தினை நேரடியாக அவதானித்ததன் அடிப்படையில், சம்பவத்தில் குற்றச் செயல்கள் எதுவும் இடம்பெற்றதாகத் தோன்றவில்லை என்றும், மரணங்

தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றப் பகிஷ்கரிப்பை முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிகள் கைவிட்டு, நேற்று பாராளுமன்றத் திற்குச் சமூகமளித்திருந்தனர். எனினும் கட்சியின் தலைமைப்பீடத் திறகெதிரான பூசல்கள் மேலும் விஸ்வரூபம் எடுத்துள்ளதாகத்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு இணைத்தத்தலைமைப்பீடம் ஒன்றே கட்சியின் உட்பூசல்களுக்குப் பரிகார மாக அமையும் என்றும், அந்த இணைத தலைமைத்துவத்தில் அமைச்சர்

(10ம் பக்கம் பார்க்க)

வினாத்தாள் - ஆங்கிலம் தொடர்ச்சி, சங்கீதம்

அம்பாறை காஞ்சிரங்குடா அதி ரடிப்படை முகாம் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை களை மேற்கொண்ட நீதிமன்றம், சாட்சியங்கள் மற்றும் சம்பவம்

யில், சம்பவத்தில் குற்றச் செயல் கள் எதுவும் இடம்பெற்றதாகத் தோன்றவில்லை என்றும், மரணங் கள் நிரூபிக்க முடியாத துப்பாக்கிச்

(10ம் பக்கம் பார்க்க)

**அன்பு வாசகர்களே!**
நாளை உங்கள் சங்கு நாதம் வெளிவரும். ஆவலு டன் காத்திருங்கள்.

# ஜே.வி.பியின் 3 அலுவலகங்கள் நேற்றுத் தாக்கப்பட்டது

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி யின் (ஜே.வி.பி) மூன்று அலுவல கங்கள் இனந் தெரியாதோரால் நேற்று தாக்கப்பட்டுள்ளது.

தலங்கம, பனிப்பிட்டிய, கொடா கம ஆகிய இடங்களில் உள்ள ஜே.வி.பி அலுவலகங்களே இவ்வாறு அடித்து நொருக்கப்பட்டுள் என. அலுவலகங்கள் தாக்கப்பட்ட போது அங்கு எவரும் இருக்காமை யால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

(10ம் பக்கம் பார்க்க)

நேற்று முகமாலையில் நடை பெற்ற பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் தளபதிகளும் படைத் தரப்பு அதி காரிகளும், யுத்த நிறுத்த கண் காணிப்புக்குழு தலைவர் ஆகி யோரையும் படங்களில் காணலாம்.

படங்கள்: தவச்செல்வன்





**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# தமிழர் தாயகம் பிரிக்கப்படுவதை புலிகள் எக்காரணம் கொண்டும் ஏற்கார்

## எம். ஐ. எம். முகைதீன் எம். பி

(அம்பாறை)

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுமாயின் மறுகணமே தனிநாட்டை ஸ்தாபிப்பதற்கு தமிழீழவிடுதலைப்புலிகள் தயாராகவுள்ளனர்.

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் எம் ஐ எம், முகைதீன் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு இணைக்கப்பட்டால் முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு தேவை எனக் கோரும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்குக் கிழக்கு பிரிக்கப்படுமானால் தனி அலகு பற்றி எந்தக் கருத்தினையும் முன்வைக்காமலிருப்பது தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளுக்கு பெரும் அச்சுறுத்தலாகும் இது தமிழ் மக்களின் உரிமைகளை அவமதிக்கும் செயலுமாகும்.

5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்த எம்.பிகளின் கோரிக்கைகள் தற்போது வலுவிழந்து சென்றுகொண்டிருக்கின்றன. அவர்களின் கோரிக்கைகளிலுள்ள ஒட்டை உடைசல்கள் பற்றி முஸ்லிம் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

அதேசமயம் வடக்குக் கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளின் நியாயப் பாட்டினையும் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். முஸ்லிம்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதனை அன்ரன் பாலசிங்கமும், தமிழ்ச்செல்வனும் அங்கீகரித்துள்ளனர்

அத்துடன் எக்காரணம் கொண்டும் ஒன்றிணைக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் தாயகம் பிரிக்கப்படுவதனை ஏற்கமுடியாது என்பதனை புலிகள் அழுத்தம் திருத்தமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

முஸ்லிம்கள் தமது தாயகம் தேசியம், சுயநிர்ணயம் பற்றி பேசலாமே தவிர வடக்குக் கிழக்கை பிரிப்பது பற்றி அலட்டிக் கொள்ள வேண்டிய தேவை இல்லை.

தமிழர்களின் போராட்டத்திற்கும் சுதந்திரத்திற்கும் நாம் எதிர்மாறாக நின்றுவிட்டு இனி வரும் காலத்தில் எப்படி அவர்களுடன் ஒன்றாக வாழ முடியும் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

(த-15)

## திறந்த பல்கலையில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தில் தொழில்நுட்பவியலில் டிப்ளோமா, தொழிநுட்பவியலில் முதுமாணி முதுதத்துவமாணி, தொழிற்துறைக் கல்விச்சான்றிதழ், தொழிற்துறை கல்வியில் டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளுக்கான அறிமுகக் கருத்தரங்கு எதிர்வரும் 17 ந் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தரவிருக்கும் எந்திரவியல் பீட உயர் அதிகாரிகளினால் நடாத்தப்படவிருக்கும் இக் கருத்தரங்கிற்கு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எந்திரவியல் துறையில் தொழில் புரிய விரும்பும் தற்பொழுது தொழில் புரியும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்பிராந்திய இயக்குநர் ஆ ஞானேந்திரன் கேட்டுள்ளார். (ந-5)

## கலந்துரையாடல்

(சுதுமலை)

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட ஆனைக்கோட்டை, மானிப்பாய், சண்டிலிப்பாய், நவாலி, சுதுமலை, பண்டத்தரிப்பு, மாதகல் மற்றும் இளவாலை ஆகிய பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோருக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை பி. ப 4மணிக்கு மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் புனரமைப்பு விடயம் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அனைத்து சனசமூக நிலைய அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலி மேற்கு கோட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

(த- 252)

29வது தேசிய விளையாட்டு விழா

## 2003 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஏற்பாடுகள்!

(கொழும்பு

29வது தேசியவிளையாட்டு விழா அடுத்தவருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன்பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

விளையாட்டினூடாக தேசிய ஐக்கியம்என்ற தொனிப்பொருளோடு அடுத்த வருடம்செப்ரம்பர்மாதம் 16ம் திகதிதொடக்கம் 20ம்திகதி வரை இவ்விளையாட்டுவிழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கான ஆரம்ப வைபவம் ஜனவரி 1ம்திகதி முதல் மார்ச் 31ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

வடக்குகிழக்கைச் சேர்ந்த விளையாட்டுவீரர்களும், வீராங்கனைகளும் விடுத்த வேண்டுகோளை அடுத்தே விளையாட்டுவிழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டதாக அமைச்சர் மேலும்தெரிவித்தார். (ம)

50 இலட்சம் அமெரிக்க டொலரை

## நீரியல் வளஅபிவிருத்தி ஆசிய அபி. வங்கி உதவி

(கொழும்பு)

இலங்கையின் நீரியல்வழம் மற்றும் பெருந்தோட்ட அபிவிருத்திக்கென ஆசிய அபிவிருத்திவங்கி 50இட்சம் அமெரிக்க டொலரை வழங்க இணங்கியுள்ளது.

நீரியல்வளத்துக்காக 20 இலட்சம் அமெரிக்கடொலர்களும் பெருந்தோட்ட வளங்களின் அபிவிருத்திக்காக 30 இலட்சம் அமெரிக்கடொலர்களும் வழங்கப்படவுள்ளன.

நீரியல் வளங்களில் தரைரீதியான அபிவிருத்தி சந்தை வாய்ப்புக்கள் மீள உற்பத்தி ஆகியனவும் பெருந்தோட்டத் துறையில் சந்தைப்படுத்தல் ஊடுபயிர்ச் செய்கை போன்றவற்றிற்கே இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

(உ-8)

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவன

## காணிக் கொள்வனவுக்கு 15 இலட்சம் ஒதுக்கப்பட்டது

யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு நிரந்தரக் காணி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 15இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப நிறுவனத்திற்கு நிரந்தரக் காணி ஒன்றைப் பெற்றுத் தருமாறு கோரி கடந்த 30ந் திகதி நிறுவன மாணவர்கள் அமைதிப் பேரணி ஒன்றை நடத்தினர். இந்த அமைதிப் பேரணியை அடுத்தே நிறுவனத்திற்கான நிரந்தரக் காணியைக் கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிரந்தரக் காணி இல்லாமையினால் கட்டட அமைப்பிற்கென உலக வங்கியினால் வழங்கப்பட்ட பலகோடி ரூபாய்கள் திறைசேரிக்கு ஏற்கனவே திருப்பப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

## செயலமர்வு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியில் உள்ளகப் பயிற்சி முன்னோடிப் பாடசாலைகளுக்கான 2ஆம் கட்ட செயலமர்வு நாளை 15ம்திகதி தொடக்கம் 16ம், 17ம் திகதிகளில் கல்லூரியின் பீடாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுகளில் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த உதவிப் பணிப்பாளர்நாயகம் திருமதி ஐ. எல். கினிகே கலந்து கொள்ளவுள்ளார். இவருடன் ஜி ரி. சற் நிறுவனத்தைச் சேர்ந்த கே. சோமசுந்தரம், எஸ். சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். ந- 5)

## அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டால் பொருளாதாரம் சீர்குலையும்

### மத்தியவங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி என்பன சமாதானம் மிக்கஅரசியலில் தங்கி இருக்கிறது என இலங்கைமத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மத்தியவங்கியின்அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

நாடு பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படவேண்டும்.

இவ்வாண்டின் பொருளாதாரவளர்ச்சி 1.4சதவீதமாக உள்ளது இதற்கு யுத்தநிறுத்த உடன்படிக்கையே காரணம்.

ஆனால் கடந்தஆண்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் 3.5சதவீதமாக இருந்து.

இப்பொருளாதார வளர்ச்சி காரணமாக பணவீக்கம் குறையும் ஆதலால் அரச ஊழியர்களுக்கான சம்பள அதுகரிப்பு சாத்தியமாவதற்கான சூழ்நிலை இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நாணயப் பெறுமதி உயர்ச்சி அடையும் எனவும் மத்தியவங்கி நம்பிக்கைவெளியிட்டுள்ளது.

சமூக அரசியல் குழப்பங்கள் ஏற்படுமானால் பொருளாதார அபிவிருத்தி மீண்டும் சீர்குலையும் எனவும் வங்கி எச்சரித்துள்ளது.

(உ-8)

## கிழக்கு மாகாணத்தில் 15வீதமான நிலப்பகுதி மட்டுமே தமிழர்க்குரியது

### சிஹல உறுமயவின் கூற்று

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டத்திற்கு அமையவே வடக்கு கிழக்குப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கும் மற்றும் புத்த பிக்குகளுக்கும் தமிழ்மொழி கற்பிக்கப்படுவதாக சிஹல உறுமயக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்திலேயே இக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

கிழக்குமாகாணத்தில் 55 வீதமான நிலப்பகுதி சிங்களவர்களுக்குரியது 15வீதமான நிலப்பகுதி மட்டுமே தமிழர்களுக்குரியது இந்தநிலையில் வடக்கு கிழக்குப்பகுதிகள் இணைந்த சுயாட்சியை புலிகள் கோருவது வேடிக்கையாகவுள்ளது.

நாட்டில் தற்போது சிங்களவர்களுக்கென்று எதுவித அரசியல் அதிகாரமும் இல்லை.

தேசிய பிக்குமார் அமைப்பு ஒன்றைப் பலம் பொருந்தியதாக அமைத்தால் மட்டுமே சிங்களமக்கள் நாட்டில்வாழ முடியும்.

பிரதமர் ரணிலும் ஜனாதிபதி சந்திரிகாவும் நாட்டைக் காட்டிக்கொடுக்கத் தயாராகிவிட்டனர் என்றும் அக்கூட்டத்தில் கடும்கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது

(த-15)

## வடகிழக்கு புனரமைப்புபற்றி தமிழ்ச் செல்வனுடன் ஆஸி.தூதுவர் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஹேப் லோஷன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனுடன் வடக்கு கிழக்கு புனரமைப்பு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கிளிநொச்சியில் சுமார் ஒருமணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்பின் போதுகடந்த காலயுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிகளை புனரமைக்க அவுஸ்திரேலிய அரசு உதவுவது குறித்து ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் தமிழீழவிடுதலைப்புலிகளின் சார்பில் மேலும்பல பிரதிநிதிகளும் அவுஸ்திரேலியாவுக்கு உதவும் அமைப்புக்களின் பிரதிநிதி பிறேட் அகிபனும் கலந்து கொண்டனர்.

(உ-8)

## மன்னார்க்கடலில் சடலம் மீட்பு

தலைமன்னார்கடல்பிரதேசத்தில் இனந்தெரியாத ஒருவரின் சடலம் ரோந்துசென்ற கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு தலைமன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுமார் 40வயதுமதிக்கத்தக்க ஆணின் சடலமொன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

(வ)

## மின்சாரம் தாக்கி பெண் மரணம்

யாழ்ப்பாணம் புங்கங்குளம் வீதியில் வசித்து வந்த குடும்பப் பெண் ஒருவர் மின்சாரம் தாக்கியதில் பரிதாபகரமாக மரணமானார்.

நேற்றுப் பிற்பகல் 2மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மண்டைதீவைச் சொந்த இடமாகக் கொண்ட மூன்று பிள்ளைகளின் தாயான நிமலதாஸன் ஆன்மேரி றினோல்டா ஜான்சி (வயது-38) என்பவர் மரணமானவராவார்.

மின் விசிறியை இயக்க முற்பட்டபோதே மின்சாரம் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த- 110, 6)

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் சிக்கல்கள் தலைதூக்கியுள்ளனவாம்

(கொழும்பு)

பாராளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்கள், பிரதமரின் உறுதிமொழியையடுத்து சபைக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் நேற்றுவரைவராதது வேறும் பல சந்தேகங்களுக்கு இடமளிப்பதாயுள்ளது.

அத்துடன், அமைச்சர் ராவூப் ஹக்கீம் மற்றும் இரு எம் பிக்கள் கடந்தமதம் பாராளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றியிருந்தனராயினும் அப்பொழுது நடைபெறும் வரவு-செலவு திட்ட விவாதத்தில சமுகமளிக்கவில்லை.

இந்நிலையில், கட்சிக்குள் புதிதாக ஏதேனும்பிரச்சினைகள் தோன்றியிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. ஆனால் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவரான பிரதியமைச்சர் மொகைதீன் அப்துல்காதர் அவ்வாறெதுவுமில்லையெனக் கூறியுள்ளார்.

ஆயினும், பகிஷ்கரிப்புக் குழுவினர்பாராளுமன்றத்தில் தனிக்குழுவாக இயங்குவது பற்றி ஆலோசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# அதி உயர் பாதுகாப்பு வலயங்களால், 22 ஆயிரத்து 136 குடும்பங்கள் ஜீவனோபாய தொழிலை இழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஆங்காங்கே படையினரால் அமைக்கப்பட்டுள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள்காரணமாக 7 குடும்பங்களுக்கு ஒரு குடும்பம் என்ற ரீதியில் தமது செய் தொழிலை இழந்துள்ளன.

யாழ். மாவட்ட அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினால் திரட்டப்பட்ட புள்ளி விபரத் தகவல்கள் இதனை உறுதி செய்கின்றன.

மேற்படி புள்ளிவிபரத் தகவல்களின் பிரகாரம்,

42 ஆயிரத்து 260 ஏக்கர் விவசாய நிலப்பரப்பு இவ் வலயத்தினுள் முடக்கப்பட்ட காரணத்தால் 16 ஆயிரம் விவசாயக் குடும்பங்களும்,

40 தொழிற்சாலைகள் முடக்கப் பட்டமையால் ஆயிரத்து 700 தொழிலாளர் குடும்பங்களும்,

82 கிலோமீற்றர் நீளமான கடற்கரை பயன்படுத்த முடியாது இருப்பதால் 4 ஆயிரத்து 436மீனவக் குடும்பங்களுமாக மொத்தம் 22 ஆயிரத்து 136 குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்துக்கான தொழிலை இழந்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் அண்மையில் கணக்கெடுக்கப்பட்டதன்படி 1 இலட்சத்து 55 ஆயிரத்து 441 குடும்பங்கள் வசிக்கின்றன.

இந் நிலையில் தொழிலை இழந்த குடும்பங்கள் 7:1 என்ற விகிதத்தில் அமைகின்றன.

இதே வேளை, கடற்படை மற்றும் தரைப்படையால் மொத்தம் 67 கிராம அலுவலர் பிரிவுகளில், 144 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் ஏற்படுத்தப்பட்டுள்ள இவ் வலயங்களுக்குள் 47 பாடசாலைகளும் 246 ஆலயங்களும் 30 ஆயிரம் வீடுகளும் அடங்கியுள்ளன.

இது இவ்விதமிருக்க, நீலங்காட்டில் எலரா- கடற்படையும் ஊருண்டியில் கஞ்சதேவா கடற்படையும் வேலணையில் வெலிசுமண கடற்படையும் மண்டைதீவில் 512 வது பிரிகேட்டும் ஞானம்ஸ் விடுதியில் 512 வது பிரிகேட்டும் அரியாலை கிழக்கில் 512, 514 வது பிரிகேட்டுகளும்தனங்கிளப்பில் 521வது பிரிகேட்டும் எழுதுமட்டுவாளில் 55 வது பிரிகேட்டும் அம்பன், பல்லப்பையில் 524 வது பிரிகேட்டும் பருத்தித்துறையில் 524 வது பிரிகேட்டும் வல்வெட்டித் துறையில் 524 வது பிரிகேட்டும் தெல்லிப்பழையில் கடற்படை மற்றும் தரைப்படையுமாக 14 இடங்களில் படையினர் நிலை கொண்டுள்ள இடங்கள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன. (உ-16, 7)

# போதைவஸ்து கடத்திய 188 பேர் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு கடத்தப்படும் போதைவஸ்து பொருட்களில் 72 சதவீதமானவை இந்தியா ஊடாகவே கடத்தப்படுகின்றனஎன பொலிஸ் போதை வஸ்து தடுப்புபணியகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இந்தியா ஊடாக போதைவஸ்து கடத்தல் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த 43 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 17 பேரை சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்பதாகவும்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பூஜித்த ஜெயசுந்தர் தெரிவித்துள்ளார்.

நாடளாவியரீதியில் கடந்த மாதம் மாத்திரம்இக்கடத்தலில் ஈடுபட்டசுமார் 188பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் சுமார் ஒரு இலட்சம்பேர் போதைவஸ்துக்கு அடிமையாகி இருக்கிறார்கள் எனவும் இவர்களில் 10 ஆயிரம்பேர் கொழும்புவாசிகள்என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## நன்றிக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வேலணை, சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய மாணவர் நலன் கருதி ஊர்காவற்றுறை பிரதான வீதியை,படையினர் பாவனைக்கு விட்டமைக்கு நன்றி தெரிவித்து யாழ்ப்பாணம் சலன சித்திரம் அமைப்பு பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவுக்கு கடிதம்அனுப்பியுள்ளது. (உ)

# வேலைவாய்ப்பை ஏற்படுத்த மாவட்டங்கள் தோறும் வேலைவாய்ப்பு நிலையம்

(கொழும்பு)

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் மாவட்டங்கள் தோறும் வேலை வாய்ப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று தொழில் வேலைவாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் 5 வது நாளாக இடம்பெற்ற நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இம்முறை அரசினால் வெளியிடப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டம் வரவேற்பை பெறாவிட்டாலும், சிறந்த பொருளாதாரத்துக்கான அடித்தளத்தை இட்டுள்ளது.

இவ்வரவு-செலவு திட்டத்தின் நோக்கம் எதிர்காலத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைவதே எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு கல்வி அபிவிருத்தி செயற் திட்டவரைபு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 19,20 ஆம் திகதிகளில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. (உ-16,6)

## பனம் விதை நடுகைத்திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பனை விதை நடுகைத் திட்ட ஆரம்ப வைபவம் இன்று மு.ப10 மணிக்கு தலைவர் க. மெய்யழகன் தலைமையில் நவாலியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு. ஜனேசமூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பனை விதை நடுகையை ஆரம்பித்துவைப்பார். (உ)

# ஜனாதிபதி யோசனை

(கொழும்பு)

தேசிய ஒற்றுமை, சமாதானம் ஆகியவற்றை நிலைநாட்டுவதற்காக அமைப்புஒன்றை ஏற்படுத்துவதற்குகுழு நியமிக்கப்படவேண்டும் என ஜனாதிபதிசந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்கா யோசனைதெரிவித்துள்ளார்.

இக்குழுவை அமைப்பதற்கு முன்வருமாறு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற, அங்கம் வகிக்காதசகல கட்சிகளிற்கும், மதத்தலைவர்களுக்கும், கட்சிகளினது தலைவர்களுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (உ-8)

# மத்தியகுழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி மு. ப. 10. 00 மணிக்கு கொழும்பு - 13, அல்விஸ் பிளேசில்,தலைவர் வி ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-16,6)

# கொழும்பில் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான பாடசாலைமட்டக் கணிப்பீடு தொடர்பானசெயலமர்வு இன்று கொழும்பு பத்தரமுல்லவில் உள்ள பரீட்சைத் திணைக்களத்தில் இடம் பெறவுள்ளது. (உ-6,16)

# கண்ணிவெடி அகற்றும் பணியில் படையினர்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியை அண்டியுள்ள மக்கள் குடியிருப்பற்ற பகுதிகளிலே புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றுவதில் இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 7 வருடங்களாக மக்கள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டு இராணுவப் பிரதேசமாக காணப்பட்ட இப்பகுதியிலுள்ள வீடுகள் பலவும் சேதமடைந்தும் பற்றைகள் வளர்ந்தும்காணப்படுகின்றன.

தற்போது இவ்வீதி மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளதோடு சிலர் தமது குடியிருப்புகள் வர்த்தகநிலையங்கள் என்பனவற்றையும் புனரமைத்து வருகின்றனர்.

இந் நிலையில்,அவர்களது நடமாட்டத்தின் போது கண்ணிவெடிகளால் பாதிப்பு ஏற்படுவதை தடுக்கவே இக் கண்ணிவெடியகற்றும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-59)

## கல்வி அமைச்சு செயலருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின்செயலாளர்கு சண்முகலிங்கம் மத்திய அரசின் கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் பிரதி செயலாளராக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்குதிருமதி கமலா சிவசிதம்பரம் பதில் செயலாளராக, மாகாணஆளுநர் அசோகா ஜயவர்த்தனாவினால் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-3)

# மழை நீரைத் தேக்கி காவலூரில் பயிர்செய்கை

(யாழ்ப்பாணம்)

ஜி.ரி.சற், நிறுவனத்தின் ஆலோசகர் எச்.காவ்ற் தலைமையில் நேற்று முன்தினம் மேற்படி நிறுவன யாழ். கண்டி வீதிக் கிளையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

ஜி.ரி.சற்: நிறுவன அதிகாரிகள், யாழ். மாநகரசபை அதிகாரிகள் மற்றும் பலர் இதில் கலந்து கொண்டனர்.

யாழ்.குடாநாட்டு வளங்களை பாதுகாப்பது மற்றும் அதனைக் கையாள்வது.

நிலத்தடி நீரும் கழிவுப் பொருட்களும் ஒன்றுடனொன்று கலப்பதால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள்.

குடாநாட்டில் உள்ள தொழிற் சாலைகள் மற்றும் வைத்தியசாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் பல்வேறு வகையான கழிவுகளை வாய்க்கால்கள், குளங்களில் சேரவிடாது மிகவும் பாதுகாப்பான முறை கடலுடன் கலக்கச் செய்யும் வழிமுறைகள்,

கிணறு, மலசலகூடம் ஆகியன அருகருகே இருப்பதால் ஏற்படும் பாதக நிலைமைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் ஆகியன குறித்து தக்க ஆதாரங்கள் வரைபடங்களுடன் ஆலோசகர் காவ்விளக்களித்தார்.

இதேவேளை,மழை நீரைத் தேக்கி ஊர்காவற்றுறையில் பயன்தரும் மரங்கள் மற்றும் பயிர்ச் செய்கையை மேற்கொள்வது குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. (உ-16)

# இந்திய வம்சாவளித் தமிழர் புறக்கணிப்பு ஆறுமுகன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

17 வது அரசியல் திருத்த சட்டத்திற்கு அமைய அமைக்கப்பட்ட அரசியலமைப்பு சபை மற்றும் இச்சட்டத்திற்கு அமைவாக புதிதாக உருவாக்கப்பட்ட 7 ஆணைக் குழுக்களிலும் எந்தவொரு இந்திய வம்சாவளித் தமிழனும் இடம்பெறவில்லையென வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் குற்றம்சாட்டியுள்ளார்.

17 வது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு அமைய சகல ஆணைக்குழுக்களிலும் இந்திய வம்சாவளியினர் ஒருவராவது அங்கம் வகிக்கவேண்டும்.

ஆனால்,புதிதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களில் இது குறித்து கவனம் எடுக்கப் படவில்லை என்று மேலும் தெரிவித்துள்ள ஆறுமுகன்,

உடனடியாக இவ் விடயத்தில் கவனம் செலுத்துமாறு அமைச்சர் ஆறுமுகன்தொண்டமான் ஜனாதிபதி,பிரதமர், சபாநாயகர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார். (உ-8)

## ஆன்மீகச் சொற் பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்கந்தசுவாமிகோயில் முன்றலில் அமைந்துள்ளநாவலர் மணி மண்டபத்தில்பிரதி வெள்ளிக் கிழமை தோறும் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு நடத்தி வரும் ஆன்மீகச் சொற் பொழிவுத் தொடரில், நாளைய தினம் ‘மீண்டு மனத்தவர் போமின்கள்’ என்ற விடயத்தில் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் சிறப்புச்சொற்பொழி வாற்றவுள்ளார். (உ)

# கொடிவாரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் உள்ள திருமறைக் காலமன்றங்கள்,எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் டிசம்பர் 3ஆம் திகதி வரையான நாட்களை கொடிவாரமாக அனுட்டிக்கவுள்ளது.

‘‘இளைஞர் உருவாக்கல்’’ என்பதே இக்கொடி வாரத்தின் தொனிப்பொருளாகும். (உ- 16-6)

# ஈராக் அதிபர் சதாம்ஹுசேனே இறுதி முடிவை அறிவிக்கவேண்டும்

## ஐ.நா. செயலரும் - அமெரிக்க அதிபரும் அறிவிப்பு

## தவறினால் தாக்குதல் நிச்சயம் என்கிறார் புஷ்



(நியூஜோர்க்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை ஈராக் ஆயுதக்களைவு தொடர்பாக நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை அந்நாட்டின்பாராளுமன்றம் நிராகரித்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென ஐ.நா. செயலாளர் நாயகம் கோபிஅனானும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சும் ஏககாலத்தில் அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக இறுதிமுடிவை ஈராக்ஜனாதிபதி சதாம்ஹீசேனிடமிருந்தேஎதிர்பார்ப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயுதக்களைவை சதாம்ஹுசைன் அமைதியாக மேற்கொள்ளத் தவறினால் தாக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும்என அமெரிக்க ஜனாதிபதி சூளுரைத்துள்ளார்.

அத்துடன்,சதாம் ஹுசைனைப் பொறுத்தமட்டில் ஈராக்பாராளுமன்றம் வெறும்றப்பர் முத்திரை எனவும் புஷ்தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈராக்பாராளுமன்றம் அதன் நாட்டு மக்களுக்காகவே குரல் எழுப்பியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கு அது குறித்து நேரடியாக தெரிவிக்கவில்லைஎன கோபிஅனான் கூறியுள்ளார்.



அத்துடன், ஆயுதக்களைவு தொடர்பாக ஈராக்கின் நிலைப்பாட்டை அறியத்தருமாறு ஈராக் அரசாங்கத்திடம் கடிதம் மூலம் கேட்டுள்ளதாகவும், அதற்கான பதிலை எதிர் பார்த்திருப்பதாகவும் கோபி அனான் தெரிவித்துள்ளார். (பி)

### விமானநிலைய 8பாதுகாப்பு அலுவலர்கள் பிடிபட்டனர்

(லண்டன்)

பிரிட்டன் லீற்றோ விமான நிலையத்தில சட்ட விரோதக் குடியேற்றவாசிகளுக்கு உதவிய குற்றச் சாட்டின் பேரில் விமானப்போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட 8 பேரை லண்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் பாதுகாப்பு உத்தியோகததர்களாவர். இவர்கள் விமான நிலையத்தில் பிரயாணிகளைச் சோதிப்பதற்காக பாதுகாப்புச் சேவைக் கம்பனியொன்றிலிருந்து கூலிககு அமர்த்தப்பட்டவர்ளாவர்.

ஆவணங்கள் விமானப் பிரயாணச் சீட்டுக்கள் விமான அனுமதிப் பத்திரங்கள் ஆகியவற்றை வழங்கிய போதும் இவர்கள் மோசடி செய்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. (பி-4)

### பேச்சுக்கள் உடன் ஆரம்பமாகாவிடில்

## மியான்மாரிலுள்ள ஐ.நா. தூதுவர் பதவி துறப்பாராம்

(ரங்கூன்)

மியான்மால் அரசியலில் ஸ்திரத் தன்மைக்கான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பேச்சுவார்த்தைகள் உடன் ஆரம்பிக்கப்படாவிட்டால் அந்நாட்டிற்கான ஐக்கிய நாடுகளின் விசேட தூதுவர் பதவியைத்தாம் துறக்கப்போவதாக ரஸாலி இஸ்மாயில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்

ராணுவ ஆட்சியாளர்களுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும்இடையில் 2000ம் ஆண்டு மியன்மாரில் நடைபெற்றபேச்சு வார்த்தைக்கு மத்தியஸ்தம்வகித்த போதும் இரு தரப்பினருக்குமிடையில் நம்பகத் தன்மையை கட்டியெழுப்பும் வகையில்எந்தவித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. இந்த நிலையில் அந் நாட்டுக்கான விஷேடதூதுவராக செயற்படுவது அர்த்தமற்றது என்று ரஸாலி இஸ்மாயில் தெரிவித்துள்ளார். (பி-2)

### பலஸ்தீனர் வன்செயல்கள் அனைத்தையும் கைவிட வேண்டும்

#### ஐ.நா. செயலர் அனான் வலியுறுத்து



(நியூஜோர்க்)

சகலவிதமான வன்முறைகளையும் உடனடியாக கைவிடுமாறு பலஸ்தீனர்களை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கோபிஅனான் வலியுறுத்தியுள்ளார்.

பொதுமக்களிற்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் அனைத்து பயங்கரவாத நடவடிக்கைகளையும் வன்மையாக கண்டித்துள்ள அவர், உடனடியாக பலஸ்தீனர்களை அனைத்து வன்முறைகளையும் கைவிடுமாறு வலியுறுத்தியுள்ளார் (பி-2)

### போதைப் பொருள் – ஆயுதவியாபாரம்

## டென்மார்க் எம்.பி- அமெரிக்க நீதிமன்றில் தடுத்துவைப்பு

(நியூஜோர்க்)

டென்மார்க் பாராளுமன்ற உறுப்பினரான யூபேஜென்ஸ்ரன் கொலம்பிய பாரா துருப்பினருடன் ஆயுதங்களுக்கு பதிலாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டதாக அமெரிக்க நீதிமன்றத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கொலம்பிய பாராத் துருப்பினருக்கு 25மில்லியன் பெறுமதியான கொக்கெயின் போதைப் பொருட்களை ஆயுதங்களுக்குப் பதிலாக விற்பனை செய்துள்ளதாக குற்றஞ் சாட்டப்பட்டு அமெரிக்க நீதிமன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர் மீது தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குற்றஞ் சாட்டப்பட்டுள்ள யூபேஜென்ஸ்ரன் மத்திய புலனாய்வுத்துறையில் பணிபுரிந்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (பி-2)

## சுனித்தாராணி ஊக்கமருந்து பாவிக்கவில்லை



(புதுடில்லி)

இந்தியத் தடகள வீராங்கனை சுனித்தாராணி ஊக்க மருந்து பாவிக்கவில்லை ஒலிம்பிக் பரிசோதனைக் குழுவினரால் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது இது உறுதி செய்யப்பட்டுள்ளது.

14வது ஆசிய விளையாட்டுப் போட்டியில். கலந்து 2 பதக்கங்களை வென்ற இந்திய தடகள வீராங்கனை சுனித்தாராணி ஊக்க மருந்தினை பாவித்தே பதக்கம் வென்றார் என்று வெளியான தகவல்களையடுத்து மேற்கொள்ளப்பட்ட பல பரிசோதனைகளின் பின்னா இறுதியாக ஒலிம்பிக்பரிசோதனைக் குழுவால் மேஷநகொள்ளப்பட்ட பரிசோதனையின் போது இவர் ஊக்கமருந்து பாவிக்க வில்லை என்பது உறுதியாகியுள்ளது.

இதேவேளை ஆசிய விளையாட்டுப் போட்டியில் வென்ற சுனித் தாராணி ஊக்கமருந்து பாவித்ததால் இவரது பதக்கங்கள் பறிமுதல் செய்யப்பட்டனவென்று கடந்த மாதம் செய்திகள் தெரிவித் தமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## எதியோப்பிய மக்கள் எதிர்நோக்கும் மிகப்பெரிய பஞ்சம்

### இலட்சக்கணக்கானோர் பலியாகும் அபாயம்

(அடிஸ்அபாபா)

எதியோப்பியாவில் மிகப்பெரிய அளவில் பஞ்சம் ஏற்படப்போவதாக அந்நாட்டின் பிரதமர்ஹெலஸ் சனாபி தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு மில்லியன் மக்கள் கொல்லப்பட்ட 1984 ஆம் ஆண்டு பஞ்சத்தை விட கடுமையான ஒருபஞ்சத்தை எதியோப்பியாதற்பொழுது எதிர்நோக்குகிறது என்று அவர் எச்சரித்திருக்கிறார்.

ஏற்கனவே 6மில்லியன் மக்களுக்கு உணவு உதவி தேவைப்படுவதாகவும் இன்னும் இரண்டு மாதங்களில் உணவு தேவைப்படுவோர் தொகை14 மில்லியனாக அதிகரிக்கலாம் என்று அவர் தெரிவித்தார்

மேலும் எதியோப்பியாவின் இந்த இக்கட்டான சூழ்நிலையில், சர்வதேச நாடுகள் தமது உணவு உதவியை அதிகரிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். (பி)

## காஸ்மீர் பிரிவினைவாத தலைவர் விடுதலையானார்

(புதுடில்லி)

காஸ்மீர் பிரிவினைவாத இயக்கத்தின் தலைவர் ஜஸ்மின் ம்மாலிக் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்க முடியாது போனமையால் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட் ஜஸ்மின் மாலிக்மீதான குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்து வந்த மேலதிகாரிகள் தற்போது அதனை நிரூபிப்பதற்கான தகுந்த ஆதாரங்கள் எதுவும கிடைக்கப் பெறாத நிலையில் காஷ்மீர் புதிய அரசாங்கம் அவரை விடுதலை செய்துள்ளது.

இதேவேளை காஷ்மீர் புதிய அரசாங்கம் ரத்தக்களரியை நிறுத்துவதற்கு காஷ்மீர் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக அறிவித்திருந்த இந்த வேளை ஜஸ்மின் விடுதலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### இஸ்ரேலில் தாம் பிரதமரானால்

## யசீர் அரபாத்தை பதவி நீக்குவாராம்

(டெல் அவிவ்)

இஸ்ரேல நாட்டின் பிரதமாராக தாம் தெரிவு செய்யப்பட்டால் பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத்தை பதவி நீக்கம் செய்வார் என்று இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் பெஞ்சமின் நெத்தநாயகு சூளுரைத்துள்ளார்.

கொலையாளிகளின் தலைவன் யசீஅரபாத் என குற்றஞ்சாட்டியுள்ள இவர் எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ம் திகதி இஸ்ரேலில் நாம் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் யசீர் அரபாத்தை பதவி நீக்கம் செய்வார் என்று சூளுரைத்துள்ளார் என்று செய்திகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஜனவரி மாதம் நடை பெறவுள்ள தேர்தலில் இஸ்ரேல் வெளிவிகார அமைச்சர் பெஞ்சமின் நெத்தநாயகு ஏரியல் ஷெரோனை எதிர்த்து போட்டியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (பி-2)

உலக தரிசனம்

### ஊர்வலங்களுக்கு ஆஸி:யில் தடை

(சிட்னி)

சிட்னியில் இன்று ஆரம்பித்துள்ள உலக வர்த்தக சம்பிரதாயபூர்வமற்ற மினி உச்சிமா நாட்டின் பாதுகாப்புக்கருதி ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்துவதற்கு அவுஸ்திரேலிய அரசு தடை விதித்துள்ளது.

உலக வர்த்தக மயப்படுத்தலிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் குழுவினரின் ஆர்ப்பாட்டங்களை தடுத்துநிறுத்துவதற்கே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பி-2)

### ஆப்கானிஸ்தானில்

## 4 மாணவர்களின் கொலையை கண்டித்து பெரும் ஆர்ப்பாட்டம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பொலிஸாரால்4 மாணவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டதை எதிர்த்து காபூலில் மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

வறுமையைஎதிர்த்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் பொலிஸாரால் 4 மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.இதனை எதிர்த்தே நேற்று ஆப்கானி ஸ்தானில் மாணவர்களால் பெரும் ஆர்ப்பாட் டம் நடத்தப்பட்டுள்ளது.

அதேவேளை ஆர்ப்பாட்டத்தின்போது ஒஸாமா பின்லேடனிற்கு ஆதரவாககோஷங்களை எழுப்பி னார்கள்என்றும்இந்தஆர்ப்பாட்டத் தைதடுத்துநிறுத்துவதற்காக பொலி ஸார்கண்ணீர்ப்புகைக குண்டுகளை பிரயோகித்ததோடு ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகத்தையும் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-2)

# இன்று ஒரு தகவல்

## மனத் தளர்ச்சியும் நரம்புத் தளர்ச்சியும்

சார்! கதவை இழுத்துப் பூட்டியதற்குப் பின்னர் பூட்டைத் திரும்பத் திரும்ப இழுத்துப் பார்க்கிற பழக்கம் உங்களுக்கு உண்டா? அப்படியென்றால் நான் சொல்கிறேன் என்று வருத்தப்படாதீர்கள் உங்களுக்கு நரம்புத் தளர்ச்சி இருந்தாலும் இருக்காலம், நரம்புத்தளர்ச்சிக்கு இன்னும் சில அறிகுறிகள் உண்டு, தொடர்ந்து பல இரவுகள் தூங்கமுடியாமல் இருப்பது, கடந்து போன சீர்கேடுகளை நினைத்துத் தன்னையே வருத்திக் கொண்டு அது எல்லை மீறி போகிறபோது தன்னம்பிக்கை இழந்து தற்கொலை பண்ணிக் கொள்ளலாமா என்று யோசிப்பது, அர்த்தமில்லாத பயம், எல்லை மீறிய பதற்ற நிலை—தினசரி நடவடிக்கையில் ஏற்படுகிற மாற்றம்—ஏதோ ஒன்றைப் பற்றிய மாறாத சிந்தனை, செய்த ஒரு செயலையே திருப்பித்திருப்பிச் செய்வது—பூட்டை இழுத்துப் பார்ப்பது மாதிரி, இவைகள் நரம்புத் தளர்ச்சியினுடைய அறிகுறிகள்.

நரம்புத்தளர்ச்சி என்பது வேறு, மனத்தளர்ச்சி என்பது வேறு; ஒன்று Neurotic மற்றது Psychotic. இரண்டையும் சேர்த்து ஒரே சொல்லில் Psycho – Neurosis என்பார்கள், நரம்புத்தளர்ச்சிக்கும், மனத்தளர்ச்சிக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். நரம்புத்தளர்ச்சி உள்ளவன் கற்பனையில் கோட்டை கட்டுபவன், ஆனால் மனத் தளர்ச்சி உள்ளவன் மனக் கோட்டை கட்டுவதோடு இருக்காமல் அதிலேயே வசித்துக் கொண்டும் வருபவன்.

பொதுவாக நரம்புத் தளர்ச்சி உள்ளவர்களுக்கு மகிழ்ச்சியோடு — மன நிறைவோ இருப்பதில்லை. ஆனால் அவர்களின் பிரச்சினையை அவர்கள் முழுதாக உணர்வது உண்டு அதற்காகச் சிகிச்சை எடுத்துக் கொள்வதும் உண்டு. நரம்புத் தளர்ச்சி உள்ள ஒருவனுக்கு முக்கியமான பிரச்சினை என்னவென்றால், சராசரி மனிதர்களில் தானும் ஒருவராக வாழ்வதா? அல்லது அவர்களிலிருந்து மாறுபட்டு இருப்பதா? என்பதுதான்.

ஆனால் மனநோய் உள்ளவன் ஆபத்தானவன். அவனுக்கு தன்னுடைய சூழ்நிலையைப் பற்றிய சிந்தனை அறவே இருப்பதில்லை. இவர்களெல்லோரும் தங்களைப் பெரிய ராஜாக்கள் என்று நினைத்துக் கொள்வது மட்டுமில்லை, எதிரிகளால் தாக்கப்படுகின்ற பேராபத்தில் சூழ்ந்திருப்பதாகவும் கற்பனைபண்ணிக் கொள்வார்கள். இருந்தாலும் நரம்புத் தளர்ச்சிக்கும் மனத் தளர்ச்சிக்கும் உள்ள வேறுபாடு ஒரு நூலிழை அளவு தான்.

நரம்புத் தளர்ச்சிக்குப் பல சிகிச்சை முறைகள் உண்டு. நரம்புத் தளர்ச்சியின் பிரிவு-அது உண்டான காரணம், தாக்கப்பட்டிருக்கிற அளவு-இவற்றைப் பொறுத்துச் சிகிச்சை அளிக்க வேண்டும். பொதுவாக மூன்று வகையான சிகிச்சைகளைத் தான் அதிகமாக எல்லோரும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்; மருந்துச் சிகிச்சை (chemotherapy), உடலில் நேரடியான சிகிச்சை (psychotherapy), மருந்துகள் மூலமாகக் கொடுக்கப்படுகிற சிகிச்சைதான் கீமோதெரபி. இது தான் மனநோய் மருத்துவத்தில் முதற் படி.

இந்த மருந்துகள் என்ன பண்ணும் என்றால், நரம்புகளை அமைதிப் படுத்தும். மருந்துகள் அதனதன் வீரியத்தைப் பொறுத்து வித்தியாசப்படும் சில மயக்க நிலையை ஏற்படுத்தும் (Sedatives) சில தூக்கத்தை வரவழைக்கும் (Tranquilizers), சில உணர்ச்சிகளைத் தூண்டும் (Stimulants). சில மனதுக்கு அமைதிகொடுக்கும் Antidepressauts) இப்படிப் பலவகை ஒரு குறிப்பிட்ட நோயாளிக்கு குறிப்பிட்டவகை மருந்து தான் பயன் கொடுக்கும். அதனால் மருத்துவ ஆலோசனை இந்தவகை சிகிச்சைக்கு மிகவும் அவசியம்.

இதைத் தவிர, மின் அதிர்வு சிகிச்சை இருக்கிறது (ECT) நரம்பு அறுவைச் சிகிச்சை இருக்கிறது. மின் அதிர்வுச் சிகிச்சையில், 200 மில்லி ஆம்ஸ், 100 வோல்ட் உள்ள மின்சாரத்தை ஒரு விநாடிக்கு செலுத்துவார்கள். சிலநேரங்களில் இந்த மின்சாரத்தை மூளையின் ஒரு பகுதிக்கு மட்டுமே செலுத்துவார்கள். இந்த வகையில் சிகிச்சை செய்கிற பொழுது துணைவிளைவாக அம்னீஷியா, குழப்பம் ஆகியவைகள் ஏற்பட்டால்கூட சீக்கிரத்தில் அவைகள் மறைந்துவிடும்.

நரம்பு அறுவைச் சிகிச்சையில் 'லோபோடமி' (Lobotomy) என்கின்ற ஆபரேஷன் செய்வார்கள். இதில் என்ன பண்ணுவார்கள் என்றால், மூளையையும், மூளையினுடைய முன் பகுதியையும் இணைக்கின்ற நரம்பு நார்களை துண்டித்து விடுவார்கள். இவை நோய்முற்றிய கடைசிப படியாகத்தான் செய்வார்கள்.

அடுத்தது சைக்கோதெரபி. நரம்புத்தளர்ச்சிக்கு ஆணிவேர் குழப்பமும் பதற்றமும் தான். இவை பெரும்பாலும் உள் மனதிலே புதைந்து இருக்கும். நேரடி மருந்து சிகிச்சையும், மின் அதிர்வு சிகிச்சையும், உடனடியாக நிவாரணம் கொடுத்தால் கூட, நீண்டகால நிவாரணம் 'சைக்கோதெரபி' யில் தான் கிடைக்கும்.

இந்தமுறை எப்படியென்றால்... தேர்ச்சி பெற்ற மனநோய் நிபுணர்கள் நோயாளியின் மனதை ஊடுருவிப் பார்க்க முயற்சி பண்ணுகிறார்கள். நோயாளிகளை அவர்கள் நினைப்பதை கூச்சமில்லாமல் சொல்லுகின்ற மாதிரித் தூண்டுவார்கள். அதனால் நோய்க்கான மூலகாரணம் தெரியும். அதற்குப பரிகாரம் தேடுவதும் சுலபம். யாராக இருந்தாலும் சரி... தன்னுடைய குறையை நினைத்து வெட்கமோ-துக்கமோ படவேண்டியதில்லை. ஆரம்பத்திலேயே கவனித்து விட்டால் அதிகமாக ஒன்றும் பயப்படவேண்டியதில்லை,

ஒரு ராஜா இருந்தார். தன்னுடைய தேசத்தில் மனநோயாளிகளுக்காக தனியாக மருத்துவமனையைக் கட்டிக் கொடுத்தார். ஒருநாள் ராஜா தன் பரிவாரங்களோடு அந்த மருத்துவமனையைப் பார்வையிடுவதற்காகப் போயிருந்தார். அங்கேயிருந்த ஒருவர் ராஜாவையே பார்த்து 'நீ யார்?' என்று கேட்டுவிட்டார். ராஜாவுக்கு மிகுந்த அவமானமாகப் போய் விட்டது. 'என்னப்பா... என்னையே பார்த்து நீ யார் என்று கேட்கிறாய்! உனக்கு எவ்வளவு துணிச்சல்! நான் இந்த நாட்டுக்கே அரசன்! தெரியுமா? என்றார் பெருமையாக! அதற்கு அந்த ஆள்; 'நான்கூட இங்கு வந்த புதி

(6-ம் பக்கம் பார்க்க)

# நிரந்தர சமாதானத்தை எட்ட புளொட் பூரண ஆதரவு வழங்கும்

### சித்தார்த்தன் எம். பி. பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானம் மலர்வதற்கு புளொட் பூரண ஆதரவுவழங்கும்என்று அதன்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்று முன்தினம்பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஒதுக்கீட்டு சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பல விட்டுக் கொடுப்புக்களுடன் 'சமாதானம் சாத்தியமானது' என்ற நிலைப்பாட்டுடன் செயற்படுவது வரவேற்கத் தக்க விடயமாகும்.

தமிழர்களின்உரிமைகளைப் பறிப்பதை நோக்கமாகக் கொண்டே நாட்டின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் கடந்த காலங்களில் செயற்பட்டு வந்தன.

முன்னைய காலங்களில் இலங்கை அரசாங்கத்துக்கு உதவி வழங்க வேண்டாம்என சர்வதேசத்தில் பிரசாரம் செய்து வந்த தமிழீழ விடுதலைப்புலிகள்,

இன்று அரசுக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர் இது நாட்டின்வளமானஎதிர்காலத்துக்கு சிறந்த அறிகுறி எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில்;

கடந்த கால யுத்தம்காரணமாக வடக்கு-கிழக்குபெரிதும் பாதிக்கப்பட்டு அழிந்து போயுள்ளது. வடக்கில் தென்மராட்சி என்றொரு இடம் இருந்ததா என்று கூடத் தெரியாமல் போயுள்ளது.

கடந்தகால அரசுகள் யுத்தத்திற்காக கொள்வனவு செய்த உபகரணங்களின் கடனை இன்று நாம் அடைத்துக் கொண்டிருக்கிறோம்.

இப்போது நடப்பது வெளிநாட்டில் நடைபெறும்முதலாவது சமாதானப் பேச்சல்ல இதற்கு முன்னரும் திம்புவில் பேச்சுக்கள் நடைபெற்றன.

அப்போதுபுலிகள் இயக்கம் உட்பட ஆறுதரப்பினர் இதில் கலந்து கொண்டனர் அவற்றுள் புலிகள் தவிர்ந்த ஏனையோர் ஜனநாயக நீரோட்டத்துள் லந்து விட்டனர்.

ஆனால் புலிகள் மட்டும் தமது தனி நாட்டுக்கொள்கையுடன்தொடர்ந்தும் போராடி வந்தனர்.

இன்று அவர்கள் விட்டுக் கொடுப்புக்களுடன்சமாதான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இது அவர்கள் ஜனநாயகத்தில்நம்பிக்கைகொண்டுள்ள நிலையைக் காட்டிநிற்கிறது எனத் தெரிவித்துள்ளார். (உ-8)

## இராசி பலன்

14-11-2002

(ஐப்பசி 28, வியாழன்)

தசமி மு.இ 10.04 வரை

சதயம் காலை 6 20 வரை

இராகுகாலம்-1.37-3.07

நல்லநேரம்-7.37-9.07

**மேடம்**

மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, நினைத்த காரியம் கைகூடும், கீர்த்தி

**இடபம்**

கடின உழைப்பு, தூரதேசச் செய்தி, முயற்சிகைகூடும், அதிகாரிகள் சந்திப்பு

**மிதுனம்**

வயிற்றில் உபாதை, அச்சமான நிலை, உறவினர் சந்திப்பு, புதிய திட்டமிடல்

**கடகம்**

திருடர் பயம், அமைதிக்குறைவு, காரியதாமதம், சிறு வியாதி

**சிங்கம்**

சுவாரஸ்யம், நல்ல உணவு கிடைத்தல், பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம்

**கன்னி**

சத்துரு ஜெயம், நோய் குணமடைதல், முயற்சி கைகூடும், செய் தொழில முன்னேற்றம்

**துலாம்**

தாழ்ந்த சுபாவம், உஷ்ண ரோகம், காரிய தாமதம், சயன சுகக் குறைவு

**விருச்சிகம்**

கல்வியில் ஆர்வம், எதிர்பாராத நன்மை, உறவினர் வருகை, முயற்சி தாமதம்

**தனுசு**

இனிய சம்பவம், கூட்டு முயற்சி, தனவரவு, செய் தொழில் விருத்தி

**மகரம்**

தொழில் திருப்பம், நண்பர்கள் கலந்துரையாடல், வீண் வார்த்தை, முயற்சி தாமதம்

**கும்பம்**

கற்பனை மிகுதி, அமைதியான சூழல், செலற இடத்தில்செலவாக்கு, நல்லமுயற்சி

**மீனம்**

உணர்ச்சிவசப்படல், வியாபார நன்மை, காரியதாமதம், சுபசெலவு

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்

# தொழில் முயற்சியாண்மை 11வது பயிற்சி நெறி விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொழிற்துறைத் திணைக்களமும், யாழ் பல்கலைக்கழகதொழில் முயற்சியாண்மைப் பயிற்சி நெறி அலகும் இணைந்து 11 வது தொழில் முயற்சியாண்மைப் பயிற்சி நெறியை விரைவில் ஆரம்பிக்கவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்வதற்குஇதுவரையில் தமது விண்ணப்பங்களை அனுப்பாதோர் விரைவாகத் தமது விண்ணப்பங்களைமாவட்ட அலுவலகம், தொழில்துறைத் திணைக்களம் அல்லது ஜீரி சற்நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-16)

# ஊடகவியலாளர் விபரக்கோவை வெளியீடு

### விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

இலங்கையில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகத்துறையில் பணியாற்றும் தொழில்சார் சுதந்திர ஊடகவியலாளர்களின் புகைப்படங்கள் அடங்கிய விபரக் கோவை ஒன்றை அடுத்த ஆண்டில் இலங்கை ஊடகவியலாளர் சங்கம் வெளியிடவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் 2 புகைப்படங்களுடன் அவர்களது விபரங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் லக்ஷ்மன் ஜயவர்த்தன, அமைப்பாளர், இலங்கை ஊடகவியலாளர் விபரக் கோவை, இல94/1 ஏ, டெம்பல் லேன், நெதிமால, தெஹிவலை 10350 என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# பிரித்தானியஆலயஒன்றியம் உலக இந்து மாநாட்டுக்கு பல வழிகளிலும் உதவி

(கொழும்பு)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு அடுத்த ஆண்டு நடத்தவுள்ள இரண்டாவது உலக இந்து மாநாட்டின் பணிகளுக்கு உதவ பிரித்தானிய ஆலய ஒன்றியம் முன்வந்துள்ளது.

திருக்கேதீஸ்வரத்தில் நீண்ட காலமாக இயங்கிவந்த குருகுலத்தை புனரமைக்கவும் மீண்டும் இயங்க வைக்கவும், இந்துப் பாலர் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவவும், இரண்டாவது உலக இந்து மாநாட்டிற்கான சிறப்பு மலரை அச்சிடும் பொறுப்பையும் இவ் ஒன்றியம் ஏற்றுள்ளது. (உ-3)

# சட்டத்துக்கு புறம்பாக வெளிநாட்டில் தொழில் புரிவோரிடமே வரி அறவீடு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யாது வெளிநாடுகளில் தொழில்புரிவோர், அவர்களின் உழைப்பில் 15 சதவீதம் வரி செலுத்த வேண்டும் என நிதியமைச்சர் கே. என். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வேலைவாய்ப்பை பெற்றவர்கள் இவ் வரியை செலுத்தத் தேவையில்லை, வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யாது மத்திய கிழக்கு மற்றும் இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் ஒரு வருடத்திற்கு குறைவான நாட்கள் இருந்து விட்டு நாடு திரும்புபவர்கள் அவர்களின் உழைப்பில் 15 சதவீத வரி செலுத்த வேண்டும்.

கள்ளத்தனமாக வேறு வழிகளில் தொழில் புரிபவர்களால் நிதி அனுப்பப்படுவதை தடுக்கவே இவ்வரி அறவிடப்படுகிறது எனவும் சொக்ஸி தெரிவித்துள்ளார். (உ-3)

# குடாநாட்டை மீண்டும் கட்டியெழுப்ப போதிய ஆதரவும் ஒத்துழைப்பும் உண்டு

## பிரிட்டிஷ் பிரமுகர் நெஸ்லிபிரபு உறுதிமொழி

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் தற்போதைய வாழ்க்கை நிலை, அவர்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் பற்றி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் விபரமாக எடுத்துக் கூறி அறிக்கை சமர்ப்பிப்பேன்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இலங்கை விவகாரங்களுக்கான பாராளுமன்றக்குழுவின் இணைத்தலைவரான நெஸ்லிபிரபு அரச செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் பிரதேச செயலர்கள், மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், திட்டப் பணிப்பாளர் செ.மகாலிங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தனர்.

இச்சந்திப்பில் நெஸ்லி பிரபு மேலும் குறிப்பிடுகையில்,

யுத்தத்தின் காரணமாக அழிந்த நிலையிலுள்ள யாழ்ப்பாணத்தினை மீண்டும் கட்டியெழுப்ப உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

இது விடயத்தில் பிரிட்டிஸ் போதிய ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என நம்பலாம் என்றார்.

அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அங்கு குறிப்பிடுகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம் பெற்ற யுத்தத்தின் காரணமாக இருப்பிடங்களை இழந்துள்ள குடும்பங்களுக்கான வீடுகளைப் புனரமைப்பதற்கு ஆகக்குறைந்தது ஒரு மில்லியன் ரூபா தேவைபடுகின்றது. ஆனால் அரசு திட்டமிட்டுள்ளவாறு மிகவும் சொற்பதொகையாகிய 50 ஆயிரம் ரூபாவில் வீட்டினைக் கட்டமுடியாது என்று தெரிவித்தார்.

மனித நேய அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவரான எஸ்.பரமநாதன் அங்கு குறிப்பிடுகையில்;

இங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மக்களின் பங்களிப்புடன் அமுல் செய்யப்படவேண்டும்; மிதிவெடி அகற்றாமை, தொழில்வாய்ப்பின்மை சுகாதார கல்வி வசதிகள் இல்லாமை, அதியுயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்படாமை போன்ற பாரிய பிரச்சினைகளால் குடாநாட்டு மக்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் மனிதநேய அமைப்புகள் இணையத்தின் தலைவரான அ நல்லதம்பி, பிரதேசசெயலர்கள் கேதீஸ்வரன், எஸ்.இரத்தினம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (உ-6,16,77)

# வீதிகளில் கூடிநின்று வீண்வார்த்தை பேசுவோர் மீது சட்ட நடவடிக்கை

## வீதி விபத்துக்கள் பொலிஸ் பிரிவு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வீதிகளில் கூடிநின்று வீண் வார்த்தை பேசுவோர் மற்றும் வீதியால் செல்வோர்க்கு தொல்லைகள் கொடுப்பவர்கள் விடயத்தில் இனிவரும் காலத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது யாழ். பொலிஸ் நிலைய வீதி விபத்துகள் பிரிவு.

மேற்படி பிரிவின் பொறுப்பாளர் இதுதொடர்பாககருத்துத் தெரிவிக்கையில்:

வீதிகளில் தேவையற்றுக் கூடி நிற்பவர்களே, இங்கு தற்போது இடம் பெற்று வரும் விபத்துக்களுக்குக் காரணமாயுள்ளனர்.

இனிவரும் காலத்தில் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தவிரவும் வாகனசாரதிகள், வாகன அனுமதிப் பத்திரம் காப்புறுதி அனுமதிப்பத்திரம் என்பன வைத்திருத்தல் அவசியமானது.

அத்துடன், மோட்டார் வாகனத்தில் பயணிப்பவர்கள் தலைக்கவசம் அணிவது கட்டாயம்.

இவற்றை மீறுபவர்கள் சட்டம் ஒழுங்கை மீறுபவர்களாகக் கணிக்கப்பட்டு அவர்கள் மீது கடும் நடவடிக்கைஎடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உரிய சமிக்ஞைகளைக் காட்டத் தவறுவோர் மீதும் நாம் சட்ட நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று குறிப்பிட்டார். (உ-71)

## 15 கோடி செலவில் குடி தண்ணீர் திட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சித் திணைக்கள கிராமியநீர் விநியோக சுகாதார நிறுவனம் உலகவங்கியின் சர்வதேசஅபிவிருத்திக் கழக உதவியுடன் 15 கோடி ரூபா செலவில் குடி தண்ணீர் திட்டத்தை செயற்படுத்தவுள்ளது.

இத்திட்டம் தொடர்பாக கடந்த புதன்கிழமை அவசர கலந்துரையாடல் சாவகச்சேரி நகர சபை நூலக மண்டபத்தில் சாவகச்சேரி நகர சபைத் தலைவர் பெண்டிக் தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இப்பிரதேச மக்களிற்கு நீர் வழங்கக் கூடிய நல்ல ஊற்றுள்ள கிணறுகளை தெரிவு செய்தல், மக்கள்வாழும் இடங்களில் குடிதண்ணீர் இல்லாத இடங்களை தெரிவு செய்தல் என்பன தொடர்பாகவும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (உ)

## விண்ணப்ப படிவங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தில் எந்திரவியல் தொழில் நுட்பம் கற்கை நெறியை மேற்கொள்ள விரும்புவோர் அதற்கான விண்ணப்ப படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என இயக்குநர் ச.ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (உ)

## இலங்கைக்கு உதவ சுவீடனும் விருப்பம்

(கொழும்பு)

இம்மாதம் 25 ஆம் திகதி நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சுவீடனும் பங்கேற்கவுள்ளது.

சுவீடன் நாட்டு உயர்மட்ட அதிகாரிகளுடன் விஞ்ஞான தொழில் நுட்பமறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்தமொறகொட நேற்று முன்தினம் பேச்சு வார்த்தை நடத்திய போது, சுவீடன் அரசு இலங்கைக்கு தேவையான உதவிகளை வழங்கத் தயாராக உள்ளது என்று அந்நாட்டு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது, இலங்கைக்குநிதி உதவி வழங்கவுள்ள சுவீடன் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் மனிதாபிமான உதவிகள் பணியின் பணிப்பாளர் நாயகம் சோறன்ஹோல் ஆசிய பிராந்தியத் தலைவர் யோகன்ஸ் ஹொற்றிக், நிதி மூலதன பிரிவின் தலைவர் ஜோன் ஹென்னின் ஆகியோர் உடனிருந்தனர்,

இலங்கைக்கு உதவி வழங்கும் ஒஸ்லோ மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் கனடா ஜப்பான் ஆகிய நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## முஸ்லிம்களின் கோரிக்கை நியாயமானது- ஜே. வி. பி.

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிற்கு வடக்குக் கிழக்கில் தனியான அலகு வழங்கும் பட்சத்தில் முஸ்லிம்களுக்கும் தனியான அலகு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானதென்று ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட ஒன்பது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் கோரிக்கைகள் நியாயமானது என தான் கருதுவதாகவும் நாடு பிளவுபடுவதை தான் முற்றாக எதிர்ப்பதாகவும் விமல்வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## எதிரணி எம். பிக்கு பல்கலைக்கழக மாணவர் மோதலுடன் தொடர்பு?

(கொழும்பு)

இரத்தக்கறைபடிந்த ஆடைகள் சில எதிரணி எம். பி. ஒருவரின் வீட்டில் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த எம். பிக்கும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வளாக மாணவர் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டதற்கு மிடையில் தொடர்புகள் உண்டாஎன்ற ரீதியில் விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாக மேல்மாகாண பிரதி பொலிஸ்மாஅதிபர் சிறி சேனஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும்கடந்த ஞாயிறன்று வலஸ்முல்லை தேயிலை தொழிற்சாலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிசார் மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தியதில் 5 பொலிசார் காயமடைந்த சம்பவத்தின் பின்னணியிலும் ஜே வி பி யினர் இருந்ததாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (உ)

## வடகிழக்கு மாகாணசபைக்கு நிர்வாகம் மாற்றம்

(கொழும்பு)

மத்திய அரசாங்கத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட கல்வி, சுகாதாரம், மீன்பிடி ஆகிய துறைகளின் நிர்வாக நடவடிக்கைகள் யாவும் மீண்டும் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இது சம்பந்தமான சுற்றறிக்கையை வடக்கு-கிழக்கு மாகாணசபையின் தலைமைச் செயலாளர் சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். (உ-3)

### மனத் தளர்ச்சியும்

தில் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தேன்... கவலைப்படாதே, போகப் போகச் சரியாகப் போய் விடும்' என்றாராம்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலய சேவைக் காலஆலோசகர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9 00 மணிக்கு யாழ் கல்விவலயப்பணிமனையில் இடம் பெறவுள்ளது. (உ-6,16)

# ஒட்டாவா சாசனத்தில் ஒப்பமிடுவது தற்கொலைக்கு ஒப்பானது

## அரசை எச்சரிக்கிறது ஜே. வி, பி.

(கொழும்பு)

கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான ஒட்டாவா சாசனத்தில் இலங்கை அரசாங்கம் ஒப்பமிடுவதை சிஹல உறுமய வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தற்கொலைக்கு ஒப்பானது என்று கட்சியின் பிரசாரச் செயலாளர் உதய கம்மன்பில அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள பேச்சுக்களில் முக்கியம் வகிக்கவுள்ளதாக அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சாசனத்தில் இலங்கை ஒப்பமிடுமாயின் வடக்குக் கிழக்கிலுள்ள எந்தவொரு படை முகாமையும் அரசாங்கத்தினால் காப்பாற்ற முடியாது போய்விடும்.

இதனால், இலங்கையின் பாதுகாப்புக்குபங்கமான எந்தவொரு விடயத்தையும் பேசுவதிலிருந்து அரசாங்கத்தைத் தடுப்பது மக்களின் கடமையாகும். இவ்வாறு அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தரம்-9 மாகாண மட்ட பொதுப்பரீட்சை மதிப்பீடு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் தரம்- 9 மாகாண மட்டப் பொதுப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடும் பணியானது இன்று ஆரம்பமாகவுள்ளது.

யாழ். கல்விக் கோட்டப் பாடசாலைகளின் விடைத்தாள் மதிப்பீடு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும்,

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் விடைத்தாள் மதிப்பீடு யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும்,

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் விடைத்தாள் மதிப்பீடு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளது.

இவ்விடைத் தாள்மதிப்பீட்டுப் பணிக்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்கள் கலந்து கொண்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு யாழ் கல்வி வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-16,6)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2002

General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2002

## ENGLISH:- I (cont.)
## THREE HOURS

Prepared by: K. M. SELVARATNAM
[B. A. (Lond.)]

### Test-15

Read the text and answer the questions that follow.

William Howard Russell was a journalist who worked for the Times of London in th middle of the nineteenth century. He was the first journalist sent specially to report war. So he was the first war correspondent. He covered the Crimean war fought by Turkey, Britain and France against Russia from 1854 to1856.

Before 1850s, newspapers had depended for war news on reports sent by soldiers This was unsatisfactory because the soldiers never saw the whole battle,so they did no know what was really happening. Besides they had no journalistic training and littl experience,so they found it hard to judge the significance of the events they witnessed. A a result the public was not well informed about wars and how they were fought. Th editor of the Times hoped to change this by sending Russell to live in the army camps an report from the battle fields.

His articles were often very critical. He also reported on the terrible conditions in th army camps, where hundreds of men died of cholera. No preparations had been mad for treating the sick and wounded. There were no organized hospitals and very littl medicine. There were not even any bandages. There was a strong reaction to Russell' report in Britain and the government sent out nurses led by Florence Nightingale, pioneer of nursing and an important historical figure in her own right.

1. When was the Crimean War fought? What were the countries involved?
2. How did newspapers get war news before 1850?
3. How did hundreds of soldiers die at that time?
4. Describe the state of the military hospitals in those days?
5. Who led the team of nurses sent by the government?
6. Explain the meanings of:
   a. Witnessed.........
   b.Pioneer .........

(10Marks

### Test-16

Write on any one of the following using about 200 words.

1. Tourist attractions in Sri Lanka
2. Teaching-the career I would like to choose

OR

3. Write a statement to the police about an accident which occurred in front of you house. Include the following.
   a. When and where it happened
   b. Who was involved
   c. How it happened
   d. Condition of the person who was injured
   e. Who took him to the hospital
   f. What you did to help the injured.

(10Marks

### மீட்பு நிதி மீளளிப்பின் தொடர்ச்சி.......

முு/257 திருமதி வதனம் கிருஸ்ணமூர்த்தி
மு/275 கறுப்பையாபிள்ளை கமலேந்திரன்
மு/309 கணபதிப்பிள்ளை கணேசராசா
மு/414 அப்பாத்துரை புஸ்பராசா
மு/479 தங்கராசா விக்னேஸ்வரன்
மு/705 திருமதி அமலசீலி ஜோசேப்
மு/711 திருமதி அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
மு/712 துரையப்பா வினாயகமணி
மு/915 திருமதி .கனகேஸ்வரி குழந்தைவேலு
மு/1078 செல்லத்துரை உதயகுமார்
மு/1187 மன்னாஸ் நவரத்தினம்

*கிளிநொச்சி மாவட்டம்*
வ/கி/229 திருமதி அரியதவமலர் சிறிசத்தியானந்தன்
வ/கி/468 தம்பு முத்துக்கிஸ்ணன்
வ/கி/510 மயில்வாகனம் யோகராசா
வ/கி/523 குமாரு ஆறுமுகம்
வ/கி/802 இராமநாதர் மகேசபிள்ளை
வ/கி/805 குமாரசுவாமி பஞ்சலிங்கம்
வ/கி/1075 திருமதி பரமேஸ்வரி கனகலிங்கம்
வ/கி/1568 இராஜேந்திரம் தேவராசா
வ/கி/1601 வேலாயுதம் இராதாகிஸ்ணன்
வ/கி/1701 வேலுப்பிள்ளை சிறிரஞ்சன்
வ/கி/1807 கந்தையாமுருகேசு
வ/கி/2092 நாகரட்ணம் சந்திரகாந்தன்
வ/கி/2172 கறுப்பையா நடராசா
வ/கி/2229 முருகுப்பிள்ளை தர்மலிங்கம்
வ/கி/2235 திருமதி சற்குணராணி நாகராசா
வ/கி/2268 திருமதி கோமளம் தங்கவேலாயுதம்
வ/கி/2300 திருமதி சாரதா இராசக்கோன்
வ/கி/2354 திருமதி அன்னலெட்சுமி தில்லையம்பலம்
வ/கி/2383 இரத்தினம் சிவராசா
வ/கி/2395 முத்துக்குமாரு கமலநாதன்
வ/கி/2473 வஸ்தியாம்பிள்ளை அல்பிறட்
வ/கி/2505 திருமதி சிவசோதி சத்தியமூர்த்தி
வ/கி/2538 கிருஷ்ணன் முருகேசு
வ/கி/2630 இஸ்ரிபன் யஸ்ரீன் பெர்னாண்டோ
வ/கி/2945 திருமதிஜெயலட்சுமி தவராசசிங்கம்
வ/கி/3048 நடராசா தவராசா
வ/கி/3194 வைரமுத்து கந்தசாமி
வ/கி/3291 கீதிரவேலு ஆனந்தராசா
வ/கி/3358 திருமதி உமா கண்ணதாசன்
வ/கி/3360 விஜயகுமார் அருள்குமார்
வ/கி/1135 சிதம்பரம்பிள்ளை கந்தையா
வ/கி/1234 சின்னத்தம்பிஇராமநாதன்
வ/கி/1267 முத்துச்சாமி ராயு
வ/கி/1411 இராசையா இராசரத்தினம்
வ/கி/2522 இராமு நாகலிங்கம்
வ/கி/2674 நாராயணசாமி சிவலிங்கம்
வ/கி/2692 மாயதவம் சிவசிங்கம்
வ/கி/2788 கிட்ணன் இராமசாமி
வ/கி/2799 இராமசாமி சிவனு
வ/கி/2869 முனியாண்டி அரசரட்ணம்
வ/கி/2933 ஆறுமுகம் சங்கரப்பிள்ளை
வ/கி/3387 நாகேந்திரம் தில்லையம்பலம்

*வவுனியா மாவட்டம்*
வ/வ/36 கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம்
வ/வ/122 தம்பு சுந்தரம்பிள்ளை
வ/வ/124 பொன்னுத்துரை கலைநாதன்
வ/வ/157 சதாசிவம் செல்வராஜா
வ/வ/316 அருளம்பலம் இராமநாதன்
வ/வ/396 கந்தையா கனகசபை
வ/வ/435 இராமநாதன் பாலசிங்கம்
வ/வ/468 சின்னையா சிதம்பரநாதன்
வ/வ/478 பாலர் அருணாசலம்
வ/வ/613 திருமதி பாக்கியம் தங்கவேலு
வ/வ/652 திருமதி விஜயகுமாரி யோகநாதன்
வ/வ/712 மரியாம்பிள்ளை பென்ஜமின்

*மன்னார் மாவட்டம்*
ம/1 திருமதி ஆனந்தகலா மோகானந்தசிவம்
ம/67 திருமதி புவனேஸ்வரி நமசிவாயம்
ம/115 திருமதி தவநாயகி பரமானந்தம்
ம/168 திருமதி தங்கமணி வேலாயுதபிள்ளை
ம/230 செபமாலு ஞானரட்ணம்
ம/242 சந்தாம்பிள்ளை கபிரியேற்பிள்ளை
ம/299 திருமதி கமலாம்பிகை கந்தசாமி
ம/462 திருமதி தெய்வானை கிருபாகரன்
ம/722 பரமு சண்முகநாதன்

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2002

General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2002

சங்கீதம் - I 1மணி
சங்கீதம் - II 2மணி

திருமதி ப. விஜயகுமார்
(சங்கீத பட்டதாரி)

### பகுதி - I

1. நாட்டிய நிகழ்ச்சியில் இரண்டாவதாக இடம் பெறும் உருப்படி
   1.தில்லானா 2. ஜதீஸ்வரம் 3. ஜாவளி 4. பதம்
2. ஸரிகமபதநி என்ற ஸப்த ஸ்வரங்களில் ஸரிகமஎனப்படுவது
   1. பூர்வாங்கம் 2. உத்தராங்கம் 3.உபாங்கம் 4.பாஷாங்கம்
3. சௌக்க காலக் கீர்த்தனை பாடும் போது எடுத்துக் கொள்ளும் களைகளின் எண்ணிக்கை.
   1.3 2. 4 3. 6 4.2
4. மேலைத்தேய கீழைத்தேய இசையில் பயன்படுத்தப்படும் வாத்தியம்
   1. வீணை 2.தம்புரா 3.வயலின் 4.குழல்
5. கிருதிகளில் சங்கதி போடும் முறையை முதன் முதல் ஆரம்பித்து வைத்தவர்
   1. தீட்சிதர் 2.தியாகராஜர் 3. சியாமா 4.தாண்டவர்
6. அருணாசலக் கவிராஜர் இராம நாடகத்தை அரங்கேற்றிய இடம்
   1. சீர்காழி 2. மதுரை 3. சிறீரங்கம் 4. சென்னை
7. நாட்டியக்கச்சேரியில் நட்டுவாங்கம் செய்யப்பயன்படுத்தப்படும் கருவி
   1. வில் 2. குச்சி 3.சுற்று 4. செண்டை
8. இசைக்கச்சேரியின் முடிவில் பாடப்படுவது
   1. தில்லானா 2.கீதம் 3. கீர்த்தனை 4. அஷ்டபதி
9. 1000 கீதங்களை இயற்றியமையால் பைடால குருமூர்த்திக்கு வழங்கியபெயர்
   1. வெயிகீத 2. கலாமணி 3.கலாநிதி 4. இராமதாச
10. வாழ்க்கையின் ஆரம்பத்தில் பாடப்படுவது
    1. ஒப்பாரி 2. நலங்கு 3.தாலாட்டு 4. லாலி
11. அழகியல் பாடம் பாடத்திட்டத்தில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்ட ஆண்டு
    1. 1972 2. 1948 3. 1960 4. 1982
12. 72 மேளராகத்தை இரண்டாகப் பிரிக்கும் ஸ்வரம்
    1.ஸட்ஜம் 2. பஞ்சமம் 3. தைவதம் 4. மத்திமம்
13. ஒரே ஒரு தாளத்தில் மட்டும் இடம் பெறும் அங்கம்
    1.I 2. o 3.u 4. +
14. ஸமகம என வருவது
    1. ஸ்வரவரிசை 2. அலங்காரம் 3.ஜண்டைவரிசை 4. தாட்டுவரிசை
15. இந்துஸ்தானிய இசையில் பூர்விதாட் எனப்படும் இராகம்
    1.மோகனம் 2. கல்யாணி 3.ஆரபி 4. பந்துவராளி
16. பிலகரி இராகத்தில் வரும் வக்ராந்திய ஸ்வரம்
    1. காலி நிஷாதம் 2. கைசிகீநிஷாதம் 3. சுத்தநிஷாதம் 4.சுத்ததைவதம்
17. நாதஸ்வரம் செய்யப்பயன்படுத்தப்படும் மரம்
    1.ஆச்சா 2. பலா 3. தேக்கு 4.பைபிள்
18. தாளக்கட்டுப்பாடில்லாத உருப்படி
    1.நிபந்தம் 2. அநிபந்தம் 3. தேவாரம் 4. திருப்புகழ்
19. கச்சேரிகளில் முதன் முதலில் கஞ்சிராவை உபதாளமாக வாசித்துப்பெருமை பெற்றவர்
    1.சின்னராசா 2.மாமுண்டிப்பிள்ளை 3.மாரிமுத்தாபிள்ளை 4. கணபதிப்பிள்ளை
20. அவனத்த வாத்தியம் எனப்படுவது
    1. நரம்புக் கருவி 2. துளைக்கருவி 3. தோற்கருவி 4 கஞ்சாக்கருவி
21. விவாதி ஸ்வரம்
    1.சுத்த தைவதம் 2.சதுஸ்ருதிதைவதம் 3. ஷட்ருதிதைவதம் 4.சுத்தரிஷபம்
22. சங்கீதத்தின் பிரதமர்
    1.அருணாசலக்கவிராஜர் 2.கோபாலகிருஸ்ணர் 3.புரந்தரதாசர் 4.தாண்டவர்
23. சியாமா சாஸ்திரிகளுக்கு பச்சிமிரியம் ஆதியப்பையருக்கு வழங்கியசெல்லப் பெயர்
    1.இராமையா 2.சியாமா 3.காமாட்சி 4. கிருஸ்ணா .
24. ஸரிகாபதாநீ இவற்றில் வரும் குறில் ஸ்வரம்
    1. ஸரிகா 2.ரிகாம 3.மபதா 4.ஸரிமப
25. வாத்தியத்திரயம் எனப்படுவது
    1.கீதம், வாத்தியம் நிருத்தியம் 2. வீணா, வேணு, தவில்
    3.வீணா, வேணு ,மகுடி 4. வீணா, வேணு ,மிருதங்கம்
26. 'பூத்தேன் தாயன' என்ற தேவாரத்தின் பண்
    1. பழம்பஞ்சுரம் 2.யமன் 3.இந்தளம் 4.பழம்தக்கராகம்
27. இந்துஸ்தானிய இசையில் கஜல் என்னும் உருப்படியைக் குறிப்பது
    1.ஜாவளி 2.பதம் 3.தில்லானா 4. கீர்த்தனை
28. சங்கீதத்துள் அடங்குபவை
    1. கீதம், வாத்தியம், நிருத்தியம், 2.வீணா ,வேணு ,மிருதங்கம்
    3. நிஷாதாந்திய,பஞ்சமதாந்திய,தைவதாந்திய 4.உபாங்க,பாஷாங்க,உத்தராங்க
29. 'ஒருக்கால சிவ சிதம்பரம்' என்னும் கீர்த்தனையைப் பாடியவர்
    1.தீட்சிதர் 2.தாண்டவர் 3.மாரிமுத்தாபிள்ளை 4.தியாகராஜர்
30. சக்கரத்திற்கு சக்கரம் மாறும் ஸ்வரங்கள்
    1.ஸப 2.ரிம 3.கப 4.ரிக
31. மேலைத்தேய இசையில் அப்பியாச வரிசை பாடப்படும் இராகம்
    1மோகனம் 2.கல்யாணி 3. மாயாமாளவ 4. சங்கராபரணம்
32. விவிதகான வினோதன் என்ற பட்டத்தைப் பெற்றவர்
    1.எஸ்.கே.பரராசசிங்கம் 2.குமாரசிங்கம் 3. செல்லத்துரை 4. தட்சணாமூர்த்தி
33. எல்லா அங்கங்களிலும் சாகித்தியம் கொண்ட உருப்படி
    1.பதவர்ணம் 2. ஆடவர்ணம் 3.சௌக்கவர்ணம் 4. மேற்கூறியமூன்றும்
34. கையால் தட்டுவது உடுக்குப்போல குச்சிகொண்டு தட்டுவது
    1. தம்பட்டம் 2. தவண்டை 3. எக்காளம் 4. திருச்சின்னம்
35. விக்ருதிஸ்வரங்களை இரண்டாகப்பிரிப்பவை
    1.பூர்வாங்க உத்தராங்க 2.உபாங்கபாஷாங்க 3.கோமளதீவிரம் 4.இராகம் தாளம்
36. கூர்ஜர நாட்டு மக்கள் கும்மிக்கு வழங்கிய பெயர்
    1.கரபா 2.தும்ரி 3.கஜல் 4.தரனா
37. பிரதான வாத்தியத்தின் வேறு பெயர்
    1.அயன் 2.சுசிர 3. அவனத்த 4.கன
38. திருச்சின்னம் வாசிப்பவர்கள்
    1.கப்புறாளை 2.போதகர் 3.தாஜரிகள் 4.குருக்கள்
39. நன்கு சுருதி சேர்த்துள்ள தம்புராவில் தாமே ஒலிக்கும் ஸ்வரங்கள்
    1.சுத்ததைவதம் ஸாதாரணகாந்தாரம் 2. சுத்தமத்திமம் சுத்தரிஷபம்
    3.சதுஸ்ருதிரிஷபம் சுத்தகாந்தாரம் 4.சதுஸ்ருதிரிஷபம் அந்தரகாந்தாரம்
40. தாது என்பதற்கு எதிர்ப்பதம்
    1.லயம் 2.மாது 3. தாளம் 4.ஸ்வரம்

# நடைபாதை வியாபாரம் இன்றுமுதல் முனீஸ்வரன் வீதிப்பகுதிக்கு மாற்றம்

## ஒத்துழைக்கத் தவறுவோர் மீது சட்டநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நவீன சந்தைப் பகுதி மற்றும் மரக்கறிச் சந்தைக்குள் இயங்கிவரும் நடைபாதை வியாபாரம் இன்று முதல் முனீஸ்வரன் வீதியில் இடம் பெறவுள்ளது.

இதனை ஏற்று நடக்கத் தவறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு எச்சரிக்கும் தொனியில் குறிப்பிட்டார் யாழ்.மாநகரசபை முதல்வர் செல்லன் கந்தையன்:

நடைபாதை வியாபாரம் மற்றும் சிற்றூர்தித் தரிப்பிடம் என்பவற்றை இடம் மாற்றுவது குறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். மாநகரசபையில் முதல்வர் தலைமையில் இடம்பெற்ற போது மேற்படி கண்டிப்பான அறிவிப்பு விடுக்கப்பட்டது.

பெரியகடை சந்தைக் குத்தகைக்காரர், ஓட்டோ சங்கத்தினர், மினிபஸ் சங்கத்தினர் மற்றும் போக்குவரத்து பொலிஸ் பிரிவு அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

மேயர் மேலும் குறிப்பிடுகையில்;

யாழ்.பிரதம தபால் நிலையப் பகுதியில் தரித்து நிற்கும் தனியார் சிற்றூர்திகள் இனி மேல் அவ்விடத்தைத் தவிர்த்து பண்ணைப் பகுதியில் தரித்து நிற்க வேண்டும் எனவும்,

கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ். வீதிகளில் வாகனங்களை நிற்பாட்ட முடியாது எனவும்,

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் யாழ் மாநகரசபைக்குச் சொந்தமான சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மணிக்கூட்டு வீதிக்கு மாற்றம் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி மாற்றங்கள் இம்மாத ஆரம்பத்தில் அமுல்ப்படுத்துவதென முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் சம்பந்தப்பட்ட சிலர் ஒத்துழைக்காமையால் தாமதம் ஏற்பட்டதும்,

இம் முறை இது விடயத்தில் மேயர் இறுக்கமான நடை முறைகளைக் கையாள்வார் எனப் பலரும் எதிர்பார்ப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-16,6)

# யாழ்- கண்டி வீதியை இருவழிப்போக்குவரத்துக்கு மாற்றியமைக்க முடிவு

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் யாழ்-கண்டி வீதி இருவழிப்போக்குவரத்து பாதையாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரையிலான சுமார் 60கிலோ மீற்றர் நீளமான பாதையே இருவழிப் போக்குவரத்து பாதையாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

ஏ-9 பாதை ஊடாக பெருமளவு கனரக வாகனங்களும் தனியார்வாகனங்களும், பாதசாரிகளும் ஒரு வழிப்பாதை ஊடாக சென்று வருவதனால் இவ்வீதியில் நெருக்கடிகளும், வீதி விபத்துக்களும் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ் இருவழிப்பாதை அமைக்கும் முயற்சிக்கு தடையாக உள்ள கிளிநொச்சி நகரப்புறக் கடைகள் அகற்றப்படவுள்ளன.

கடந்த 15வருடங்களாக மூடப்பட்டிருந்த இப்பாதை பிரதமரினாலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி மீண்டும் பாவனைக்காக திறந்து விடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ- 8)

## யு. என். எச். சி. ஆர். உயர் பிரதிநிதிகள்

# மக்கள் வாழ்வை மேம்படுத்தும் வழிகுறித்து நேற்று ஆராய்வு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதைய நிலையில் எந்த வகையில் மக்களின் பொருளாதார வளங்களை முன்னேற்றலாம் என்பது பற்றிய நிலைமைகளை நேரில் ஆராயும் பொருட்டு ஜெனிவாவில் இருந்து யு.என்.எச்.சீ.ஆர், யு.என்.டி.பி. ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த உயர் மட்ட அதிகாரிகள் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தனர்.

இவர்களுடன் சர்வதேச தொழில் நிறுவனத்தைச் சேர்ந்த உள்ளூர் அதிகாரிகளும் சமுகம் தந்திருந்தனர்.

நேற்றைய தினம் மதியம் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இவர்கள் இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்து யாழ்ப்பாணக் குடாநாட்டு நிலைமைகள் பற்றியும், மக்களின் உடனடித் தேவைகள் மற்றும் பொருளாதார நிலைகளை உயர்வடையச் செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய முறைகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் போது யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகள், பிரச்சினைகள் பற்றி இணையப் பிரதிநிதிகள் விரிவாக எடுத்துக் கூறினர்.

இதேவேளை, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் பல்வேறு பொது அமைப்புகள் மற்றும் இராஜதந்திரிகள் குடாநாட்டுக்கு விஜயம் செய்துள்ளனர்.

குடாநாட்டு நிலைமையை நேரில் பார்வையிட்டு அது தொடர்பில் ஆராய்வதுடன் இவர்கள் பணி முடிந்துவிடுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் உயர இவர்கள் இதுவரை எந்தவொரு பங்களிப்பும் செய்ததாக தெரியவரவில்லை என அங்கு பிரசன்னமாகியிருந்த மக்கள் பிரதிநிதி ஒருவர் இவ் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டினார். (உ-77

# இந்துசமய விழிப்பு விழுமிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விழிப்புணர்வு மற்றும்விழுமியங்கள் தொடர்பானகருத்தரங்குஒன்றுநேற்று யாழ்.கல்விவலயப்பணிமனையில் இடம்பெற்றது,

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம் 10, 11க்குகல்வி கற்பிக்கும் இந்து சமய ஆசிரியர்கள் இதில்பங்கேற்றனர்

மத்திய கல்வி அமைச்சின் இந்து சமயபிரிவைச் சேர்ந்த ஜெ எஸ்.எஸ். சில்வா இந்த கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துள்ளார். (உ6,16)

# மிலேனியம்ஆயுதக்கிடங்கு வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு ஏப்ரலில்

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி ஆயுதக்கிடங்கு சம்பந்தமான வழக்கு விசாரணை அடுத்த வருடப் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதிக்குஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆயுதக்கிடங்குதொடர்பான வழக்கு கண்டிநீதவான் நீதிமன்றத்தில் நீதவான் லியோன் செலிவரத்னதலைமையில் நடை பெற்றுவருகிறது.

ஆயுதக்கிடங்கு வழக்குவிசாரணை தொடர்பாக இராணுவத்தளபதி லயனல் பலகல்ல, பிரிகேடியர் விதாரண 7இராணுவ அதிகாரிகள் ஒரு சிவிலியன் ஆகியோர் உட்பட 10 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியின் 844 ஆம் இலக்க வீடொன்றில் இருந்துகனரக ஆயுதங்கள் சயனைட் வில்லைகள் என்பவற்றினை கண்டி விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவு சிரேஷ்ட அதிகாரி குலசிறி உடுவரம்பொல தலைமையிலான பொலிஸார் கண்டு பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் செயலகத்துடன் சேர்ந்து செயற்படும்

(தென்மராட்சி)

யாழ் குடாநாட்டு மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திலுள்ள உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் யாழ். மாவட்ட அரச செயலகத்துடன் இணைந்து பணி செய்வதென முடிவு செய்துள்ளன.

நேற்றுமுன்தினம் காலை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனை அவரது அலுவலகத்தில் சந்தித்து அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இவ் முடிவினைத் தெரிவித்தனர்.

அதே வேளை, இணையத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களை உரிய முறையில் பதிவு செய்து அதன் பணிகளை விஸ்தரிப்பது தொடர்பாகவும் இச் சந்திப்பின் போது ஆராயப்பட்டு சாதகமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதனடிப்படையில், சகல அரசசார்பற்ற நிறுவனங்களையும், இணையத்தையும் இன்னமும் ஒருவார காலத்துக்குள் பதிவுசெய்து தரப்படும்என அரசாங்கஅதிபர் வாக்குறுதி அளித்துள்ளார்.

இது இவ்விதமிருக்க, குடாநாட்டு மக்களின் நிவாரண புனரமைப்பு, மற்றும் அபிவிருத்தித் திட்டங்களில் அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களும் பங்களிப்புச் செய்யும்வகையில் புதிய அணுகுமுறைகளுக்கு தான் ஆவன செய்வதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது மேலதிக அரசஅதிபர் து. வைத்திலிங்கம் திட்டப்பணிப்பாளர் செ. மகாலிங்கம் ஆகியோரும் உடனிருந்தனர். (த-77)

# சர்வதேச நாணய நிதியத்திற்கு அரசாங்கம் அடிபணிந்து விட்டது

## குற்றம் சாட்டுகிறது லங்கா சமசமாஜக் கட்சி

(கொழும்பு)

சர்வதேச நாயணய நிதியத்தின் பிரேரணைகளுக்கு அமைவாகவே ஐக்கிய தேசிய முன்னணி அரசின இரண்டாவது வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என லங்கா சம சமாஜக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அரசின் வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

சில்லறை வர்த்தகத்துக்கு. கடந்த ஆண்டில் வற்வரி விதிக்கப்படவில்லை இதனையிட்டு சர்வதேச நாணய நிதியம் அதிருப்தி கொண்டிருந்தது.

இந்த நிலையில் புதியவரவு செலவுத்திட்டத்தில் இவ் வற்வரி அடுத்த ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் சில்லறை வர்த்தகத்துக்கும் விதிக்கப்படுகிறது.

இதன் மூலம் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவுக்கு அமையவே செயற்படுகிறது என்பதுதெளிவாகி உள்ளது.

நிதியமைச்சர் கே. என். சொக்ஸியை மாத்திரம் இவ்வரவு- செலவுத்திட்டம் தொடர்பான குற்றச் சாட்டுக்களுக்குப் பொறுப்பாளியாக்க முடியாது.

கடந்த ஆண்டில் முக்கிய அம்சங்கள் கொண்ட நிபந்தனைகளை ஏற்று ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டமைக்காக பொதுஜன ஐக்கிய முன்னணியையும் குற்றம் சாட்ட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

# நாவற்குழி களஞ்சியத்தை புனரமைக்க அனுமதி

(கொழும்பு)

கடந்த காலஇராணுவ நடவடிக்கைகள் காரணமாகச் சேதமடைந்துள்ள நாவற்குழி களஞ்சியத்தைப் புனரமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனை உடன் புனரமைக்கும் படி யாழ். அரச அதிபருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, இந்தக் களஞ்சியத்தைப் புனரமைக்க 30 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து வேலைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்காக முதற் கட்டமாக 10 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதால் புனரமைப்புப் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண தகவல் அதிகாரி மெக்கல தெரிவித்துள்ளார். (உ)

# கிளிநொச்சியில் உப பரிவர்த்தனை நிலையம் ரெலிக்கொம் அமைக்கும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா ரெலிக்கொம்நிறுவனம், கிளிநொச்சியில் உப பரிவர்த்தனை நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளது.

கிளிநொச்சி 155ஆம் கட்டைப்பகுதியில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த தொலைத்தொடர்பு கோபுரத்துக்கு அருகேயே இவ் உப பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இவ் உப பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்பட்டதும் முதல் கட்டமாக 60 இணைப்புகள் கிளிநொச்சிக்கு வழங்கப்படவுள்ளன.

முன்பு கிளிநொச்சியில் அமைக்கப்பட்டிருந்த தொலைத்தொடர்பு கோபுரம் 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் விமானப்படையினர் நடத்திய தாக்குதலில் பாரிய சேதத்திற்குஉள்ளாகி இருப்பது தெரிந்ததே. (உ- 8)

காதன்மை கந்தா
அறிவறியார்த் தேறுதல்
பேதமையெல்லாம் தரும்.
குறள்

# வலம்புரி

## துகிலுரிந்த போது----

ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச நேற்று முன்தினம் பாராளுமன்றில் விடுதலைப் புலிளுக்கு எதிராகக் கடுமையாக வாதிட்டார். இவரின் வாதத்திற்கு எதிராக ஆளுங்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரும் இந்து கலாசார அமைச்சருமான தி.மகேஸ்வரன் கடுமையாக வாதிட்டார். இதனையடுத்து சபாநாயகர் யோசப்மைக்கல்பெரேரா அமைச்சர் தி.மகேஸ்வரனை சபையிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டார்.

ஆளுங்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை சபையிலிருந்து சபாநாயகர் வெளியேற்றுவது இலங்கையின் அரசியல் வரலாற்றில் மலிந்து போன ஒரு விடயமல்ல.

ஒரு காலத்தில் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கத்தை அவர் அமர்ந்திருந்த ஆசனத்தோடு சேர்த்துத்தூக்கி பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றினார்கள். எனினும் சுந்தரலிங்கத்தின் சமயோசித வாதம் மீண்டும் அவரை அவர் அமர்ந்திருந்த ஆசனத்தோடு சேர்த்துத் தூக்கி சபையில் இருந்த இடத்தில் கொண்டுபோய் வைத்தனர். இஃது எதிர் தரப்பில் இருந்த தமிழனுக்கு ஏற்பட்ட நிகழ்வு.

ஆனால் அமைச்சர் மகேஸ்வரனுக்கு நடந்த நிலைமை அப்படியல்ல, ஆளுங்கட்சி வரிசையில் இருக்கும் போது அவர் சபையிலிருந்துவெளியேற்றப்பட்டுளளார். இதிலிருந்து தமிழர்கள் ஒனறை உணர்ந்துகொள்ள முடியும்.

ஆதாவது ஆளுங்கட்சியாக இருந்தாலென்ன, எதிர்க்கட்சியாக இருந்தாலென்ன தமிழன் எனற பார்வையிலேயே ஒவ்வொரு சிங்கள அரசாங்கங்களும் செயற்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலேயே அமைச்சர் மகேஸ்வரன் ஆளுங்கட்சியில் இருந்த போதிலும் சபையிலிருந்துவெளியேற்றப்பட்டுள்ளார்.

அமைச்சர் மகேஸ்வரனை சபையிலிருந்து சபாநாயகர் வெளியேற்றியபோது தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்பதைநினைக்கும் போது, துச்சாதனன் திரளெபதியின் துகிலுரிந்த போது துரியோதனனுக்குப் பயந்து சபையில மௌனமாக இருந்த பாத்திரங்களே ஞாபகத்திற்கு வருகிறது.

# வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சுருங்கிய செலவில்

# பயன்பெறக்கூடியதான விவசாயத்தொழில்கள்

வடகிழ்மாகாணங்களில் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் பல ஏக்கர் தரிசு நிலங்களும் யானைகள் ஆட்சி புரியும்காடுகளும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றன. இப்படி இருக்கும் காடுகளை வருங்காலச்சந்ததியினருக்குத் தேவைப்படும் என்ற முக்கிய நோக்கத்தால், இன்று நாம் பயிரிடும் நிலங்களையும், தரிசாகக் கிடக்கும் பல ஏக்கர் நிலப்பரப்பையும் தற்போது சுருங்கிய செலவில் செய்பயிர்கள் மூலமும், கால் நடைகள் மூலமும் வரும் வருமானங்களிலும் பார்க்கக் கூடியதாக வருமானம் பெறக்கூடிய முயற்சிகளையும் தரிசாக இருக்கும் நிலங்களையும் பிரயோசனப்படுத்தும் நோக்கத்துடன் ஆராய்வோம்.

தற்காலம் முக்கியமாக எங்கள் பிரதேசங்களில் நெல் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் எங்கள் இரத்தத்தில் தமிழ் வேர் ஊன்றி இருப்பது போல், எங்கள் மூதாதையர் பயிர்செய்த நெல் இனங்களே இன்றும் எமது வாய்க்குச் சுவையாக இருப்பதாக ஒரு மனப்பான்மை எம்மிடம் ஊறி உள்ளது. பழமையை அவதானித்துப் புதுமையைப் புகுத்தின் நாம் குறைந்த செலவில் வருமானம் அடையக் கூடியதாக இருக்கும். அறிவுடைய நாங்கள் தற்கால விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், கமத்தொழில் உத்தியோகத்தர்கள் கூறுவதையும் சிறிதளவு சிந்தித்து, அவர்கள் கூறும் புதுமைகளை எங்கள் வேளாண்மையில் புகுத்த வேண்டும்.

### நெல் இனங்களும் செயற்கைப் பசளையும்

தற்காலம் இலங்கையில் சிபார்சு செய்யப்பட்ட எச்.4 எச்.7, எச்.8, பச்சைப் பெருமாள் போன்ற இனங்களை விதைத்து விளைவை இரட்டிக்கலாம், சாதாரணமாகக் கீழ் மாகாணத்தில் எச்-4கால போகத்திற்கு ஏக்கருக்குச் சராசரி 60 புசலும், எச்-7சிறு போகத்திற்கு 60 புசல் வரையும் கொடுக்கின்றன ஆனால் ஏக்கருக்குச் செயற்கைப் பசளையாகிய நைதரசன் 90 இறாத்தலும் பொசுபேற்று 105 இறாத்தலும், பொட்டாஸியம் 90 இறாத்தலும் உபயோகிப்பின் ஏக்கருக்கு எச்.4 100-120 புசலும், எச்-7, 80 புசலும் பச்சைப் பெருமாள் 80 புசலும்பெறக் கூடும் புதுநிலமாகில் பொசுபேற்று 105 இறாத்தலும், நிலம் பழமைஅடையஅடைய பொசுப்பேற்றை படிப்படியாகக் குறைத்துக் கொண்டு வரவும் ஏக்கருக்குச் சராசரி 35 புசல்நெல் அறுவடைசெய்யின் எச்செலவும் நாம் சுயமாகப் பயிரிடின் இதற்குள் அடங்கும். இதற்கு மேல் விளைவதெல்லாம்எமது வருமானமே.

### சிறு தானியங்கள்

சிலஇடங்களில் குளப்பாய்ச்சல் பூமியாகில்இருபோகங்களிலும் சுலபமாகப்பயிரிடலாம். ஆனால் வானம்பார்த்த பூமியில் காலபோகம் ஒன்றிலேயே பயிரிடலாம். இதற்கு ஏக்கருக்கு 71 புசல்விளையக்கூடிய டிக்வீ போன்றநெல்லினங்களைஆராய்ச்சியாளர்கள் பரிசோதித்து வருகின்றனர். இவ்வினங்களைப் பயிரிடின் மேட்டுநிலங்களிலும் கூடிய வருவாயைத்தரும. வானம் பார்த்த பூமிகளில் பயிர் அறுவடைசெய்ததும், ஈரலிப்புக் காயுமுன் சிறு தானியங்களை விதைப்பின் நிலத்தைச் செழிப்புறச் செய்வதுடன் அல்லாமல் எங்கட்கும் நாம் வளர்க்கும் கால்நடைகட்கும் தகுந்த புரதத்தினைத் தரிசாகக் கிடக்கும் காலங்களில், விளைவிக்கலாம். அரிசி நிறைவடையச்செய்யாத புரதச்சத்தினை பயறு, எள் போன்ற பயிர்கள் நிறைவடையச்செய்யும். எள் எங்களுக்குத்தேவையான புரதத்தையும், எண்ணெயையும் தரும். இன்று இவ்வெண்ணைக்கு அதிக மகத்துவம்உண்டு. எமது மூதாதையர் இவ்வெண்ணெயை உபயோகித்து வந்த காலங்களில் இரத்தஅழுத்தம் என்ற நோயைக் கேளவிப் பட்டதாகக்கூட அறியமாட்டார்கள்.

**ந. சண்முகம்**

யாழ்ப்பாணப் பகுதிகளில் பெரும்பலும் எள்விதைப்பின காணி கெட்டுவிடும் என்னும் ஓர் நம்பிக்கைஉண்டு. செயற்கை உரமும், கூட்டெருவும் உபயோகிப்பின் இக் கூற்றுப் பொய்த்துவிடும், மேலும் உவர்நிலங்களுக்கு பொக்கலி, உவர்வெள்ளை, எஸ்.ஆர் 26 போன்ற நெல்லினங்களைப் பயிரிடின் தரிசாகக் கிடக்கும் இந்நிலங்கள் வருமானத்தைக் கொடுக்கும். உவர்எனச் சொல்லப்படும் இப் பூமிகளில் பெருமழைகள் ஓய்ந்தபின்பு எள் விதைப்பின் அதிகபலன் தரும். இதற்கு உதாரணமாக யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த கல்லுண்டாய் வெளியில் நெல்விளையாத பூமிகளில் எள் விளைந்தமை சான்றாகும்.

குளப்பாய்ச்சல் சிறுபோகத்திற்குப் போதாமல் இருக்கும் இடங்களில் நெல்விளைவைத் தடுத்து நிலக் கடலை, மிளகாய் போன்றபயிரினங்களைப் பயிரிடின்அக்காலம் முழுவதும் நெல்லிற்குத் தேவையான தண்ணீரிலும் பார்க்க அரைவாசியுடன் இப்பயிரினங்களைப் பயிரிடலாம். இப் பயிரினங்கள் அறுவடைசெய்யும் பொழுது தொழிலாளர்கஷ்டமாகில் நட்ட பின்பு விளைவடைந்ததும்வேருடன்பிடுங்கி ஒரே ஆய்சலாகக் காய்ந்த மிளகாயை ஆயும் ஜப்பானிய மிளகாயினத்தைப் பயிரிடலாம்.

பெரும் பயிர்களை யோசிப்போமாகில் மரமுந்திரிகைகளை (கசுக்கொட்டை) வடகிழ் மாகாணங்களில் ஊற்றுப்பிடியா தரிசு நிலங்களில் பயிரிடின் ஓர் ஏற்றுமதிப் பொருளாகிய முந்திரிகைக் கொட்டைகளிலிருந்து வருமானம் அடையலாம்.

### கால் நடை வேளாண்மை

கால் நடைவேளாண்மையைக் கவனிப்பின் தற்காலம் கோழிவளர்ப்புச் சிறப்படைந்துள்ளது. ஆனால் தீன்செலவினால் பெரும்பாலோர் நட்டம் அடைகின்றனர். இந்நட்டத்தைக் குறைத்து லாபம் அடைதற்கு ஒரேயொருவழி கலப்பினங்களை முட்டைககு வளர்த்தலேயாகும். இதற்கு ஒஸ்ராவைற் உகந்ததென்பது என்கருத்துஎங்கள்மாவட்டங்களில் கால நடை அபிவிருத்திக்கு அதிக இடமுண்டு. கோடைக் காலங்களில் எங்கு புல் செழிப்படைந்து வளர்கின்றதோ அவ்விடங்களில் பால் பசுக்களை திறந்த வெளிகளில் மேய்ச்சல் தரைகளில் விட்டு வளர்க்கலாம். இல்லாவிடின் கலப்பினப்பசுக்களைப் பட்டிகளில் கட்டித் தீன் கொடுத்துவளர்க்கவேண்டும். பட்டிகளில் கட்டிவளர்க்கும் பசுககட்குத் தீன் செலவு கூடுதலாக இருககும்.

ஆனால் எங்கள் முன்னோர் பாற்பசுக்களுக்கு கொடுத்த முளமுருககமிலையையும், அறுகம் புல்லையும் தரிசாகக் கிடக்கும் நிலங்களில் தகுந்த பசளையிட்டு தெரிவு செய்து பயிரிடின போதிய புரதமுளள உணவு பசுக்களுக்குக் கிடைக்கும், அத்துடன் வைக்கோல் நெல் தவிடு, தேங்காய்ப் பிண்ணாக்குக் கொடுப்பின் பாற் பசுக்கள் அதிக வருவாய் தரும், மேலும் எங்கள்பகுதி சீதோஷ்ணநிலைஇறைச்சியின் வர்க்கங்களுக்கே உகந்ததாகும். ஆனால் இவ் வினங்களைத் தென்னந் தோப்புகளில் பிக்கேறியா, பிறிசாந்தா, அவரை போன்ற பச்சிலை உணவுகளை அபிவிருத்தி செய்துஇவ்வர்க்க மாடுகளை மேய்த்துவரின் மாட்டால் வருமானமும் அத்துடன் தென்னந்தோப்பின் விளைவும் அதிகரிக்கும்.

அடுத்ததாக ஆட்டிறைச்சியே அதிகமாகஎங்கள் பகுதி மக்களால் விரும்பப்படுகிறது, இதில் வருவாய் அடைவதற்கு பின்வரும் அபிவிருத்திகள் செய்யப்பட வேண்டும். எமது பகுதிகளில் ஆட்டிற்கேற்ற உணவுகள் போதியளவு தற்சமயம் சிறு காடுகளாக இருக்கும் பூமிகளில் உண்டு. இலங்கை முழுவதற்குமான ஆட்டிறைச்சி விநியோகிப்பதற்கு வட கீழ் மாகாணங்களே போதுமானது, முதலாவது எமது நாட்டாடுகள் குட்டி விரைவாக வளர்ப்பதற்குப் போதுமான பால் கொடுப்பதில்லை. இதை அபிவிருத்தி செய்வதற்கு சானான், அல்குளோரி யூலியன் போன்ற பாலினங்களின் கடாக்களை நாட்டாடுகளுடன் கலந்து முதற்சந்ததியை உற்பத்தி செய்யவேண்டும். பின்பு இச்சந்ததிகளிலிருந்து இரு குட்டிகள் போடும் தாய்களைத் தெரிய வேண்டும். அதற்குப் பின் இறைச்சிக் குகந்த யமுனா, பாறி போன்ற கடாக்களைக் கலந்து அபிவிருத்தி செய்யின் போதிய வருவாய் உண்டு.

அடுத்ததாக முயல்களை மேய்ச்சல் பூமியுள்ள பெருவலை அடைப்புகளில் தகுந்த கூடமைத்து உணவு கொடுத்து வளர்ப்பின ஆட்டிலும் பார்க்க அதிக வருவாய் தரும். கடைசியாக ஒவ்வொருவர் இருக்கும் வளவுகளிலும மர நிழல்களில் பெரிய தொட்டிகள் அமைத்து, அடிக்கடி நீர் வற்றாமல் இறைப்பின பின் குறாமீஸ், தலப் பிஸ்பா போனற மீன் இனங்களை வளர்த்து வீட்டிற்குத் தேவைப்படும நேரங்களில் பிடித்துப் பாவிப்பதுடன் மிஞ்சியதைவிற்கலாம்.

இதற்கு மீனபிடி இலாகாவிடம் கோரின் மீன் குஞ்சுகளையும் தந்து வளர்க்கும் முறைகளைப் பற்றியும் அறிவுரை கூறுவார்கள். நாம் ஒன்று கூடி பயிர், கால் நடை விவசாயத்தில் முயற்சி செய்யின் நாமும எமது சந்ததியினரும் எழுச்சி பெற்று வளர்ச்சியடைவோம்.

## சாயி அருளமுதம்



அர்த்தமற்ற பேச்சுக்களையும், வீணாக அலம்புவதையும் தவிர்ப்பதற்கு 'வாக்கு' எனப்படும் பேச்சு மிகவும் கடுமையாகப் பயிற்றப்பட வேண்டும். நாவை அடக்கிவைத்திருங்கள். நீங்கள் பேச உந்துவதையெல்லாம் பேசிவிடாதீர்கள். அவ்வாறு பேசுவதற்குத் தூண்டும் மனோபாவத்தை நன்கு குறைத்து விடுஙகள். 'மௌனம்' மின்கலத்துக்கு (பட்டரிக்கு) புத்துயிர் கொடுப்பதால் கூடிய நேர தியானம் சித்தியாகும்.

பிரேமையினால் நிரம்பப் பெற்றிருங்கள். அப்பொழுது உங்கள் வார்த்தைகளும் பிரேமையைப் பரப்பும். வலியினால் அவஸ்த்தைப் படுவோருக்கு தைலம் பூசப் படுவது போல அவை இனிமையாகவும், இதமாகவும் இருக்கும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# நல்லூர் பிரதேசத்தில்
# அறவிட்ட குற்றப்பணம்
# பிரதேச அபிவிருத்திக்கு


(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்கு இவ் வருடத்தில் இரு தடவைகளாக ஒரு இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை யாழ். மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் காரியாலயம் வழங்கியுள்ளது.

நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் சுகாதாரப் பரிசோதகர்களால் பல்வேறு நபர்களிடம் இருந்து அறவிடப்பட்ட குற்றப் பணமே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணத்தைக் கொண்டு தமது பிரிவில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்த நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கே.மணி பல்லவராஜன் இதற்கு காலாயிருந்த சுகாதாரப் பரிசோதகர்களையும் பாராட்டியுள்ளார். (உ-9)

# எழுத்தாளர் கணேசலிங்கம் காலமானார்



(யாழ்ப்பாணம்)

மலேசியாவிலிருந்து வெளிவரும் ''செம்பருத்தி'' பத்திரிகை யின் செய்தி ஆசிரியர், கணபதிப பிள்ளை கணேசலிங்கம் நேற்று இந்தியாவில் காலமாகிவிட்டார்.

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தைச சேர்ந்த இவர், கணபதி கணேசன் என்ற புனை பெயரில் ஈழநாடு, தினகரன், சிரித்திரன், செவ் வந்தி, வீரகேசரி ஆகிய பத்திரி கைகளில் இவர் பல ஆக்கங் களை எழுதியுள்ளார்.

சிறுகதை, கவிதை, நூலாசிரியரான இவர் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ''மேகம்'' சஞ்சிகை யின் ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

சிறுநீரக நோயினால் பாதிக் கப்பட்ட இவர், இந்தியாவில் சிறு நீரக மாற்று சத்திர சிகிச்சைக் குப் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவரது கவிதைத் தொகுப் பொன்று அண்மையில் சிங்கப் பூரில் வெளியிடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான இவர் மறைந்த பத்திரிகையாளர் மயில வாகனம் நிமலராஜனின் சிறிய தந்தையார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (இ)

## முஸ்லிம் காங்கிரஸ்...

ரவூப்ஹக்கிமும், பிரதி அமைச்சர் அதாவுல்லாவும் இடம் பெறவேண்டும் என்ற கருத்து பலம் பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் பிரதமரின் விசேட அழைப்பின் பேரில் அவரைச் சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் களான எச்.எம்.எம்.ஹரீம், எம்.ஜ. அன்வர்இஸ்மாயில் ஆகிய இருவரும் நேற்று பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ளவில்லை இவர்கள் இருவரும் இன்று பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவைச் சந்தித்த பின்பே பாராளுமன்றம் செல்வதா? இல்லையா? என்று முடிவு எடுக்க விருப்பதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. (ம)

## ஜே.வி.பி.யின்...

இதேவேளை ஜே.வி.பியினர் வருடா வருடாவடரும் கொண்டாடும் கார்த்திகை வீரர்தினம் நேற்று கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்க மைதானத்தில் நடை பெற்றது அங்கு ஜே.வி.பி தலைவர் றோகணவிஜேவீராவின் 13வது நினைவு தினமும் அனுஷ்டிக்கப்பட்டது. (வ)

## யாழ். வந்த...

வர்கள் அனைவரும் அனுராத புரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம)

## குற்றமற்றவரென...

கூறப்படும் கடந்த 10ந்திகதி நண்பகலே தான் அனலைதீவுக்குச் சென்றதாகவும்,

அதற்கு முன்னர் தான்அங்கு இருக்கவில்லை என்றும் தெரிவித்ததுடன்,

அதற்கு ஆதாரமாக காரைநகர் கடற்படைகட்டளை அதிகாரியின வரவு அறிக்கைத் துண்டினை யும் மன்றில் சமர்ப்பித்தார்.

இதேவேளை இம் மரணம தொடர்பாக' புலன்விசாரணைகளை நடத்துமாறு பொலிசாரு க்கு நீதிபதி உத்தரவிட்டுள் ளார். (இ-75)

## பாதுகாப்பு உப...

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் பியுறு ஹெவ்டே தலைமையில் இடம் பெற்ற இச்சந்திப்பில், விடுதலைப்புலிகளின் சார்பில், கடற்புலிகளின் துணைத்தளபதி லெப். கேணல் செழியன், கடற்புலிகளின் தாக்குதல் தளபதி ஸ்ரீராம், வடமுனை கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த அறிவு, யாழ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி. இளம்பரிதி, விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகச் செயலா ளர் புலித்தேவன், மற்றும் வலி கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் இனியவன் ஆகியோரும்,

படைத்தரப்பின் சார்பில்உயர் பாதுகாப்பு வலயக் குழு அதிகாரி சாந்தகொட்டகொட, வடபிராந்திய கடற்படைக் கட்டளை அதிகாரி ரியல் அட்மிரல் சரத்விரசேகர, கிழக்குப் பிராந்திய கட்டளை அதிகாரி ரியல் அட்மிரல் சரத் இரத்தின கீர்த்தி, கப்டன் காலித குணதிலக, லெப்கேணல் சில்வா, மற்றும் யாழ்மாவட்டப் பிரதி இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல இரட்ணசபாபதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் மீள் குடியமர்வு சம்பந்தமான உபகுழுவின் இரண்டாவது உப கூட்டத்தை நாளை மறுதினம் தெல்லிப்பழையில் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது .

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்னர் சமாதானத்துக்குப் பாதிப்பாக, ஒப்பந்தத்தை மீறும வகையில் கடற்படையினர் பல தடவைகள் செயல்பட்டனர் என்று இச்சந் திப்பின்போது விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் சமாதானத்தைப் பாதிக்கச் செய்யும் வகையில், கடற் படையினர் இனிவருங்காலங்களில் செயற்படக்கூடாதென் றும், விடுதலைப்புலிகள் படையி னரைக் கேட்டுக் கொண்டனர்.

அதுமட்டுன்றி புரிந்துணர்வு ஒபபந்தத்தை பேணும் வகையில் தாமும் செயற்படுவோமென்றும் புலிகள் உறுதியளித்தனர்.

இதேவேளை நாளை மறுதினம தெலலிப்பழையில் இடம்பெறவுள்ள பாதுகாப்பு வலய மீள் குடிய மர்வு சம்பந்தமான உபகுழுவின் இரண்டாவது கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள, விடுதலைப்புலிகளின வடமுனைப் போர்த்தளபதி கேணல் தீபன், பாதுகாப்புக் குறித்து ஆயுதத்துடனேயே கூட்டத்திற்கு சமூகமளிக்க வேண்டி இருப்பதால், அவர் ஆயுதத்துடன் கூட்டத்திற்கு சமூகமளிக்க அனுமதி வழங்க வேண்டும் என்று விடுதலைப்புலிகள் தரப்பில் நேற்றைய கூட்டத்தில் பிஸ்தாபிக்கப் பட்டது.

இதற்கு பாதுகாப்பு அமைச்சுடன் கலந்தாலோசித்த பின்னரே முடிவை வெளியிட முடியும் என்று படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர். (இ-43-7)

## காஞ்சிரங்குடா..

சூட்டினால் ஏற்பட்டதென்றும் நேற்றுத் தீர்ப்பு வழங்கியது.

வழக்கு விசாரணைகளை மேற கொண்ட அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம். வை.எம்.இசடின் இத்தீர்ப்பினை வழங்கினார்.

கடந்த மாதம் 9ந்திகதி காஞ் சிரங்குடா அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்ப வத்தில் எட்டுப் பொதுமக்கள் உயிரிழந்தமை தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பாக நான்கு அதிரடிப்படையினர் உட்பட சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மற்றும துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள அளிதத வாக்கு மூலத்தின் அடிப் படையிலேயே இத்தீர்ப்பு வழங் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை இச்சம்பவத்தில் உயிரிழந்த ஏழாவது நபர் தொடர் பான மரண விசாரணைத் தீர்ப்பை வழங்கிய கல்முனை நீதிவான் நீதி மன்ற நீதிபதி கே.தட்சணாமூர்த்தி தனது தீர்ப்பில்,

அளிக்கப்பட்ட சாட்சியங்க ளில் குற்றம் ஒன்று புரியப்பட் டுள்ளதை உறுதிப்படுத்தும் சந்தே கத்தை ஏற்படுத்தியுள்ளதாக`வும், பொலிஸார் புலன் விசாரணைகளை மேற் கொண்டு வழக் குத் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டமை தெரிந் ததே. (இ)

## தேவை ஏற்படும்......

பட்ட விடயங்கள் மக்களுக்கு அவ்வப்போது தெரிவித்திருந் தது. ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகளுடன் என்ன பேசுகிறார்கள் என்பதை மக்களுக்கு தெரியப் படுத்தவில்லை.

இந் நிலையில் அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சி கள் பற்றி எனக்கு எதுவும் தெரி யாது. பேச்சு வார்த்தை தொடர் பான விடயங்களை எனக்கு அறிவிப்பதற்கு அரசாங்கம் ஏன் தயங்குகின்றது என்று தெரியவில்லை.

இலங்கை தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கிறது. அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு வழங்கிய உறுதிமொழிகள் என்ன என்பது தொடர்பாக மக்களுக்கு தெரியப் படுத்த வேண்டும்.

ஒவ்வொருவரும் தத்தம் சொந்த தேவைகளிற்கு ஏற்றவாறு நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு அனுமதிக்க முடியாது. தேவை ஏற்படும் போது ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தவும் தயங்கமாட்டேன்.

இலங்கையின் சகல சமூகத்தவர்களினதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் அவர்களைத் திருப்திப் படுத்துவதே எனது கடமையாகும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்தார். (ம)


# யாழ் மாவட்ட மாணவர்களுக்கு

⇨ CIMA - Foundation Level & Intermediate

விரிவுரைகள் ஆரம்பம்

25-11-2002 முன் பதிவுகளை மேற்கொள்ளவும்

⇨ வங்கியியல் கற்கைநெறி

**B.Sc.(Hons) Degree & ACIB**

**DBF, ACBF, CBF (CIB/IBSL)**

வகுப்புக்கள் நடைபெறுகின்றன

⇨ வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்

(யாழ்ப்பாணம் / பேராதனை)

GAQ, 1st in com, B.A (I), B.A (II) & B.com

விரிவுரைகள் ஆரம்பம் 16.11.2002

INQUIRIES/ REGISTRATION

DIRECTOR

**JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT**

464, Hospital Road,

Jaffna

[C/5245]

மதுபானப் பிரியர்களே!

பருகிடுவீர்!

தரம் அறிந்திடுவீர்!

"பனம் சாராய வகைகளில் இதுவரை வெளிவந்திராத புத்தம் புதிய சுவையுடனும் அதி உயர் தரத்துடனும் வெளிவந்துள்ளது"

# "இரட்டை வடி"

# பனஞ் சாராயம்

# "Double Distilled"

செறிவு Strength ]36.5% **PALMYRAH ARRACK**

உத்தரவு பெற்ற சகல மதுபான விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரித்து விநியோகிப்போர்

வலிகாமம் வடிசாலை

வலிகாமம் பனை தென்னைவளஅபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

மானிப்பாய்

[C/5256]

யாழ்ப்பாணம்

மூன்றாவது வாரமாக

அஜித்(இரு வேடங்களில்), மீனா நடித்த

# வில்லன்

(ரீலஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30(புதிய நேரம்)

விசேட காட்சி: 9.30

[C/5257]


# கண்ணீர் அஞ்சலி

எமது வலம்புரிப் பணிமனையில் தலைமை ஒப்பு நோக்குநராகக் கடமையாற்றும் **திரு. க. லோகநாதன**

அவர்களின் அருமைச் சகோதரர்

எழுத்தாளர

# க.கணேசலிங்கம்

அவர்கள் இந்தியாவில் காலமானதையிட்டு நாம் ஆழ்ந்த கவலையடைவதுடன், அவரின் பிரிவால் துயரு றும் அன்னாரின் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரிக்குடும்பம்

# ஆறாவது ஆண்டின் நினைவஞ்சலி

கோப்பாய் "குமரகிரி" இல்லத்தின் திலகமாக வாழ்வாங்கு வாழ்ந்து வயதிருபத்தொன்றில் வாழ்வினை நீத்து

அமரத்துவமெய்திய

செல்வ **இளையப்பு திலகராணி** அவர்கள்

தோற்றம் 13.02.1975



மறைவு 14.11.1996

(கோப்பாய்கிறிஸ்தவக்கல்லூரியின் முன்னாள் உயர்தர வகுப்பு மாணவி)

ஆண்டுகள் ஆறானாலும் அணையாத தீபமானாய்!

உங்கள் ஆத்மா இறையருள் பெற்று

சாந்தி அடைவதாக!

ஓம் சாந்தி!!!

சமூகரத்தினம் M.K.இளையப்பு J.P

குடும்ப உறவினர்கள்

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

(கணபதி கணேசன்)

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தடியைப் பிறப்பிடமாகவும், மணல்த்தறை ஒழுங்கை கந்தர்மடத்தை வசிப்பிட மாகவும், தற்போது மலேசியா செம்பருத்தி பப்ளி கேசனில் பத்திரிகையாளராகவும் கடமை புரிந்து வந்த கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் நேற்று (13.11.2002) புதன்கிழமை இந்தியாவில் காலமானார். அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

70, மணல்தறை ஒழுங்கை

கந்தர்மடம்

யாழ்ப்பாணம்

தகவல்

கௌரிகணேசன்

[C/5255]

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.